
GOKULAM


மார்ச் 2007 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



பரீட்சைக்கு ரெடி!
– கவர் ஸ்டோரி


'க்ளிக்' கேலரி
லீவு விட்டதும்
இந்த மாதிரி இடத்துக்கு
அப்பாவைக் கூட்டிட்டுப்
போகச் சொல்லணும்!
சிறுவன் : பா.பிரசாத், சென்னை

கோகுலம்

மார்ச் 2007 மலர்: 25 இதழ்: 2

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...



நீங்கள் எப்படி தேர்வை எழுதி விட்டு முடிவுக்காக ஆவலுடன் காத்திருப்பீர்களோ, அப்படித்தான் வெள்ளி விழா சிறப்பிதழை உங்களுக்கு அளித்துவிட்டு பதிலை எதிர்பார்த்து காத்திருந்தோம். வாசக ஆசிரியர்களான நீங்கள் கோகுலத்தைப் படித்து நல்ல மதிப்பெண் போட்டுள்ளீர்கள். மிக்க நன்றி!

ஆண்டுத் தேர்வுகள் வந்துவிட்டன. இதே

வெற்றி நமதே!

நேரத்தில் உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி நடைபெறுகிறது. உங்களில் பலரும் கூட ரசிகர்களாக இருக்கலாம். ரசியுங்கள்! ஆனால் அது உங்கள் ஓராண்டு உழைப்பை வீணடிக்கும் விதத்தில் கவனத்தைச் சிதறடித்துவிடக் கூடாது. 'ஹைலைட்ஸ்' மட்டும் பார்க்கலாம்; அல்லது செய்தியில் தெரிந்து கொள்ளலாம். 'கோகுலம் வாசகர்களான எங்களுக்கு இதெல்லாம் சொல்லணுமா என்ன? தேர்வினைச் சிறப்பாக எழுதி, ஜெயித்துக் காட்டுகிறோம். பாருங்கள்!' என்று நீங்கள் சொல்வது கேட்கிறது. சந்தோஷம்! வாழ்த்துகள்!



அன்புடன்
கோகு



கவலை தீர்ந்தது!

வித்தியாசம்!

கோகுலம் முதல் இதழின் அட்டையில் இடம் பெற்றவர்களைக் கண்டுபிடித்து, பேட்டியெடுத்ததுடன், அவர்களின் குழந்தைகள் படத்தை வெள்ளிவிழா சிறப்பிதழ் அட்டையில் வெளியிட்டு அசத்திய வித்தியாசமான அணுகுமுறை அருமை!

- வே.ந.கதிர்வேல், வேலூர்



பொறுப்பு!

கோகுலம் இதழை என் ஆசிரியரிடம் காட்டி, நமது பள்ளியும் இதுபோல் கோகுலம் சுழல் கோப்பையைப் பெற வேண்டும் என்று சொன்னேன். எனது ஆசிரியரும் உதவுவதாகச் சொல்லி, அனைவரின் படைப்பையும் திரட்டி அனுப்பும் பொறுப்பை என்னிடம் அளித்துள்ளார்.

- ந. ராமசந்திரன்,
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி
மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்

பாராட்டுகள்!

பல அபூர்வமான தகவல்களை கோகுலம் மூலம் தான் நாங்கள் தெரிந்துகொள்கிறோம். தினங்கள் பற்றிய வித்தியாசமான பகுதி எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. பாராட்டுகள்!

- ப. எழிலன், சேலையூர்

விஞ்ஞானம்!

உன் அட்டையில் வெளியான 'க்ளிக் கேலரி' பகுதி ஆச்சர்யமடைய வைத்தது. 'ஃபோட்டோஷாப்' என்ற மென்பொருள் மூலம் இதைச் செய்தீர்கள் என்பதை அறிந்த போது விஞ்ஞானத்தின் அருமை புரிந்தது.

ஆர்.கே.அம்பிகா, எட்டாம் வகுப்பு,
ஸ்ரீராமகிருஷ்ணா மே.நி.பள்ளி,
திசையன்விளை

தமிழண்ணா!

தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் ஏற்படும் சந்தேகங்களை எப்படித் தெரிந்து கொள்வது என்று நீண்ட நாட்களாகவே யோசித்துக் கொண்டிருந்தோம். தமிழண்ணா மூலம் அந்த கவலை தீர்ந்தது.

- கே. கஸ்தூரி,
காந்திநகர்

• டி.என். சாரதா



ஆண்டுத் தேர்வுக்கான தேதி அருகில் வந்துவிட்டது. நீங்கள் எல்லாம் பரீட்சைக்கு எந்த அளவுக்குத் தயாராகி இருக்கிறீர்கள், ஆசிரியர்கள் எந்த முறையில் தயார் செய்துள்ளார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள சில பள்ளிகளுக்குச் சென்றோம்.

அங்கு உங்களைப் போன்ற நண்பர்கள், ஆசிரியர்களிடமிருந்து கிடைத்த நம்பிக்கையான பதில்களும் பரீட்சைக்கான வழிமுறைகளும் இதோ இங்கே.



• கே.என்.பூர்ணிமா

காலையும் மாலையும்!

“காலை ஐந்திலிருந்து ஏழரை வரை படிப்பேன்.



• ஆர்.தீபக் கிருஷ்ணா

மாலை ஐந்தரை முதல் பத்தரை வரை படிப்பேன். முழு இரவு கண் விழித்துப் படிக்க வேண்டியது இல்லை. கணக்கு, வேதியியல் பாடங்களைப் படிப்பதற்குக் காலை நேரமே பொருத்தமானது. மாலை வேளையில் மற்ற பாடங்களைப் படிக்கலாம். வகுப்பில் நடத்தும் பாடங்களை அன்றாடம் வீட்டில்



படித்து, எழுதிப் பார்த்தாலே போதும். நல்ல மதிப்பெண் எடுக்க முடியும்'' என்றார்.

தேர்வு வரும் சமயம் உலகக் கோப்பைக் கிரிக்கெட் வருகிறதே என்றதற்கு...

''அது என் ஞாபகத்திலேயே இல்லை. அப்படியே ஆர்வமாக இருந்தாலும் ஸ்கோர் கேட்டுக் கிட்டாப் போச்சு'' என்றார்.

- எம். பிரதீப், +2, (வேளாங்கண்ணி மெட்ரிகுலேஷன் பள்ளி, அசோக்நகர்)

படிப்பும் டி.வி.யும்!

''காலையும் மாலையும் ரெகுலராகப் படிக்கிறேன். தொடர்ந்து ஒரேயடியாகப் படிக்காமல் கொஞ்ச நேரம் ரிலாக்ஸாவதற்கு டி.வி.யில் நியூஸ் பார்ப்பேன். தனியா டியூஷன் போறது எனக்குத் தேவையில்லன்னு தோணுது. பள்ளியில் நடத்தறதை கவனமா கேட்டு, படிச்சாலே

பரீட்சைக்கு ரெடி!


• ஆர். ரம்யா



அசோக் நகர் வேளாங்கண்ணி மெட்ரிக்குலேஷன் பள்ளியின் கணித ஆசிரியை எஸ். நிர்மலா:

''தேர்வுக்கான புளூபிரிண்ட் தயார் செய்துவிட்டோம். எந்தெந்தப் பிரிவில் அதிக மதிப்பெண் என்பதெல்லாம் அதிலேயே அடங்கிவிடும். நடுத்தரமான, சுமாராகப் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இது உதவியாக இருக்கும். யூனிட் டெஸ்ட் உண்டு. ஜனவரி, பிப்ரவரிகளில் இது நடக்கும். யூனிட் டெஸ்ட் முடியும்போது ஓரளவு எல்லா பாடங்களும் மாணவர்களுக்கு எளிதாகி இருக்கும். மற்றபடி தேர்வுக்காக நாங்கள் மாணவர்களுக்கு அறிவுறுத்துவது:

- ★ முதலில் ஐந்து நிமிட நேரம் ஒதுக்கி, கேள்வித்தாளைப் படியுங்கள்.
- ★ தெரிந்த கேள்விகளை முதலில் எழுதுங்கள்.



• எம். பிரதீப்

போதும்கிறது என்னோட எண்ணம்.''

- ஆர். ரம்யா +2, (வேளாங்கண்ணி மெட்ரிக்குலேஷன் பள்ளி)

அக்காவும் அறையும்!

''காலேஜ் படிக்கிற அக்கா ரொம்ப ஹெல்ப் பண்ணுவாங்க. எப்படியெல்லாம் தேர்வு எழுதணும்னு டிப்ஸ் தருவாங்க. அவங்க படிக்கிற அறையை எனக்காகத் தந்துட்டாங்க. ரொம்ப சந்தோஷமா இருக்கு''

- ஆர். தீபக் கிருஷ்ணா, (பத்தாம் வகுப்பு, ஜெய்கோபால் கரோடியோ மேல்நிலைப் பள்ளி)

இயல்பும் வெற்றியும்!

''இரண்டிலிருந்து ஐந்து மணி நேரம் தினமும் படிக்கிறேன். பள்ளியில் நடத்துவது மட்டும் போதுமானது என்பதால் தனியாக டியூஷன் போகவில்லை. பப்ளிக் என்ற டென்ஷன் இல்லாமல் இயல்பாகப் படிக்க வேண்டும். அப்போதுதான் படித்ததை ஞாபகத்தில் வைத்து எழுத முடியும்''

- கே.என்.பூரணி அரசு (பத்தாம் வகுப்பு, ஜெய்கோபால் கரோடியா)



தமிழாசிரியர் திரு. பாரதராஜா: ''படுத்துக் கிடக்கும் மாணவனை உட்கார வைப்பதும், உட்கார்ந்துள்ள மாணவனை நடக்க வைப்பதும், நடக்கிற மாணவனை ஓட வைப்பதுமே எங்கள் நோக்கம்! அதன்படி மாணவர்களைத் தேர்வுக்குத் தயார் செய்கின்றோம். தேர்வு பற்றி அவர்களுக்குச் சொல்ல விரும்புவது:

- ★ பதற்றம் அடையாதீர்கள்.
- ★ நிதானமாய், தெளிவாய் தேர்வுக்குச் செல்லுங்கள்.



★ தெளிவாகவும் புரியும்படியும் எழுதுங்கள்.

★ பிரிவு எண், கேள்வி எண்ணை கவனமாக எழுதுங்கள்.

★ கணிதத்தில் முதலில் பெரிய வினாக்களுக்கும், மற்ற பாடங்களில் முதலில் சிறிய வினாக்களுக்கும் விடை யளியுங்கள்.

★ கைடுகளுக்கு அதிக முக்கியத்துவம் தராமல் புத்தகத்தில் உள்ளவற்றை முழுமையாகப் படியுங்கள்.

★ தேர்வு எழுதி முடித்தபின் ஐந்து நிமி டங்கள் ஒதுக்கி, எழுதிய எல்லாவற்றையும் ஒருமுறை சரி பாருங்கள்.''

அப்பாவும் அம்மாவும்!

“காலை ஆறிலிருந்து ஏழு, மாலை ஆறரையிலிருந்து எட்டரை வரை தினமும் படிப்பேன். அரைமணி நேரம் டீ.வி. பார்ப்பேன். மற்றபடி கர்நாடக இசை கத்துக்கிறேன். அப்பா, அம்மா ரொம்ப ஹெல்ப் பண்றதால பரீட்சையப் பத்தின பயமே இல்லை'' டி.என். சாரதா, (ஏழாம் வகுப்பு, ஜெய்கோபால் கரோடியா மேல்நிலைப் பள்ளி)

இன்றும் நாளையும்!

“காலை நேரத்துல படிப்பேன். மாலையில் ஹோம்வொர்க், ரிட்டன் வொர்க் பண்ணுவேன். இப்பவே டெய்லி படிக்கிற பழக்கத்தை ஏற்படுத்திக்கிட்டாதானே நானும் பத்தாவது, பன்னிரண்டாவது வரும்போது நெறைய மார்க் எடுத்து ஸ்டேட் ஃபர்ஸ்ட் வர முடியும்!''

- எம். சுவாமிநாதன் (ஆறாம் வகுப்பு, ஜெய்கோபால் கரோடியா மேல்நிலைப் பள்ளி)

■ எம். சுவாமிநாதன்



படங்கள்: **டெவி. கண்ணன், பொள்ளாச்சி சுந்தரம்**

★ அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதுங்கள்.

★ பக்கங்களை நிரப்புவதற்காக தேவையில்லாதவற்றை எழுதி வைக்காதீர்கள்.

★ நேரத்தின் அருமை உணர்ந்து எழுதுங்கள்.

★ தேர்வுக்கு முதல் நாள் விடிய விடிய புத்தகத்தை வைத்துக்கொண்டு உட் கார்ந்திருக்காமல் ஏற்கெனவே நன்றாகப் படித்ததை ஒருமுறை மனத்தில் நினைத் துப் பாருங்கள். வினாவுக்கு விடை எழுதினால் போதும். கேள்வியை மறுபடியும் எழுதி நேரத்தை வீணாக்காதீர்கள்!

அட்டையில்: **அகிலா கிருஷ்ணா**

வண்ணப்படம்: **உத்ரா**


யாருக்கு வைரம்?
கதை:
அ. அனீஸ் ஃபாத்திமா,
உத்தமபாளையம்
படம்:
ராம்கி
அம்மாகுளம் என்ற ஊரில் வேலப்பன் என்ற வணிகர் இருந்தார். பெரும் செல்வந்தரான அவர் இரக்க குணம் கொண்டவர்.
நன்றி ஐயா, இந்த உதவியை மறக்க மாட்டேன்.
வேலப்பனுக்கு மூன்று மகன்கள். மூத்தவன் சங்கரன், அடுத்தவன் இந்திரன், மூன்றாமவன் பாஸ்கரன். மூவரும் தந்தையின் வியாபாரத்தைக் கவனித்தனர்.
அப்பா, நாங்க கடைக்குப் போய்ட்டு வரோம்.
ஒருநாள் வேலப்பன்...
பிள்ளைகளே இங்கே வாருங்கள். உங்களிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டும்.
என்னப்பா?
எனக்கு வயதாகிக் கொண்டே செல்கிறது. இனி வியாபாரத்தை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்...


“நான் புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று வரலாம் என்று முடிவு செய்துள்ளேன்.
சென்று வாருங்கள். நாங்கள் வியாபாரத்தைக் கவனித்துக் கொள்கிறோம்.
நான் செல்லும் முன் மூவருக்கும் சொத்தைப் பகிர்ந்தளிக்கப் போகிறேன். அதற்காக ஊர்ப் பெரியவர்களை வரச் சொல்லி இருக்கிறேன். அதோ வருகிறார்கள்.
வணக்கம் வேலப்பா!
வணக்கம் வாங்க, வாங்க! நான் அழைத்ததும் வந்ததற்கு நன்றி!
சொத்தினைப் பிரிக்கும் வேலை நடந்தது.
எல்லாவற்றையும் சமமாகப் பிரித்தாயிற்று. இந்த வைரத்தை என்ன செய்வது? விற்றுப் பணத்தைப் பிரித்துக் கொள்கிறீர்களா?
இது அயல்நாடு சென்றபோது என் நேர்மையைப் பாராட்டி ஒரு நண்பர் அளித்தது...
பிள்ளைளே! நீங்கள் மற்றவர்களுக்குச் செய்த உதவியைப் பற்றிச் சொல்லுங்கள். உங்களில் யார் சிறந்த முறையில் பிறருக்கு உதவியிருக்கிறாரோ, அவருக்குத்தான் வைரம்!
மூத்தவன் சங்கரன்...
என் நண்பன் இலட்சம் ரூபாய் கொடுத்திருந்தான். அது யாருக்கும் தெரியாது. திடீரென இறந்துவிட்டான். ஆனாலும் நான் அதை அவன் குடும்பத்தாரிடம் கொடுத்துவிட்டேன்.


அடுத்தவன் இந்திரன்...
ஒரு நாள் முரடர்களிடம் மாட்டிக் கொண்ட இளம்பெண்ணைக் காப்பாற்றினேன். அசந்திருந்தால் என்னைக் கொன்றிருப்பார்கள்.
மூன்றாமவன் பாஸ்கரன்...
நம் வியாபார எதிரியான முத்துசாமி விபத்தில் உயிருக்குப் போராடியபோது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன்.
பெரியவர்களே நீங்களே சொல்லுங்கள். யாருக்கு இந்த வைரத்தைக் கொடுக்கலாம்?
சங்கரனின் செயல் ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்ற ஒழுக்கத்தைச் சொல்வது...
இந்திரன் செய்த உதவி நல்ல மனிதனுக்கேயான கடமையுணர்ச்சி...
...ஆனால் எதிரிக்கும் உதவிய பாஸ்கரனின் செயலே சிறந்தது.
பாஸ்கரனுக்கே வைரம் வழங்கப் பட்டது. சகோதரர்கள் அதை மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண் டனர்.
உனக்கு வைரம் கிடைத்ததில் எங்களுக்கும் பெருமை தம்பி.





''ஏண்டா சோமு பக்கத்து கிளாஸ் மணி உன்னை அடிச்சதால ஸ்கூல்ல இருந்து பாதியில வந்துட்டியாமே?''

''அம்மாதான் மணி அடிச்சதும் வீட்டுக்கு வந்துடுன்னு சொன்னாங்க.''

- ஜி.சிந்தியா, இராஜபாளையம்

''எவ்வளவு பெரிய ஆபத்து வந்தாலும் யானை, குதிரை எல்லாம் கத்தவே கத்தாது. ஏன்னு சொல்லு?''

''யானை பிளிறும், குதிரை கனைக்கும்.''

- ராமலட்சுமி, இராஜபாளையம்

''முப்பது மடங்கு வேகமா பூமி சுத்தினா என்ன ஆகும் சோமு?''

''நம்ம அப்பா டெய்லி சம்பளம் வாங்கிட்டு வருவாருடா.''

- சி.பி.செந்தில்குமார், சென்னிமலை

''லெட்டர் எழுதிட்டு பின்னால ஏண்டா கோடு போடறே?''

''பின்கோடு போட்டாதான் லெட்டர் சரியாப் போகும்னு ஆசிரியர் சொன்னார்டா ராமு.''

- எம்.சரவணன், வீரணம்

''சோமு, பன்னிரண்டு பெரிசா? நூறு பெரிசா?''

''பன்னிரண்டுதான் பெரிசு! பன்னிரண்டு அஞ்சு எழுத்து; நூறு ரெண்டு எழுத்துதானே!''

- கு. அருணாசலம், தென்காசி

''ராமு, 'ஐடோன்ட் நோ'ன்னா என்னடா அர்த்தம்?''

''எனக்குத் தெரியாது.''

''போடா உனக்கும் தெரியாதா?''

- அனுராதா ராஜப்பா, வத்தலக்குண்டு



உலகில் மிகப் பெரிய நாகரிகங்களில் சிந்து சமவெளி நாகரிகமும் ஒன்று. அதுமட்டுமல்ல, இன்றும்கூட, அதன் மிச்ச சொச்சங்களாகப் பல்வேறு பகுதிகளும், அந் நாகரிகம் கலந்த வாழ்க்கை முறையும், பழக்க வழக்கங்களும் நம் நாட்டில் உள்ளன.

நாகரிகம்' எனப்படுகிறது!

சிந்துவெளி நாகரிகப் பரப்பு மிகவும் பெரியது! இது கிட்டத்தட்ட 800,000 ச.கி.மீ. பரப்பளவு உடையது. வடமேற்கே பலுசிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லையிலிருந்து ராஜஸ்தான் வரை நீண்டது. வடக்கே இமயமலை அடிவாரத்திலிருந்து, தெற்கே குஜராத், பீகார் வரை பரவியிருக்கிறது. நல்ல ஆற்றுப் பாசனம் மிக்க, மழை வளம் நிறைந்த வண்டல் மண் பிரதேசம்தான் சிந்துவெளி. கி.பி. 1921-22களில், ஹுபர்ட் மார்ஷல், ஹரப்பா நாகரிக அழிவுகளையும், முத்திரைகளையும், 1931-ல் 'தயாராம் சன்னி' மொஹஞ்சதாரோவையும் கண்டுபிடித்தனர். அந்தந்தப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டவை, அந்த நகரத்தின் பெயரிலேயே அழைக்கப்படுகின்றன.

• நீச்சல் குளம்



ஆஹா...



• பாத்திரங்கள்

சிந்துவெளி நாகரிகம் பூத்து செழித்த காலம் என்பது கி.மு.2600– கி.மு. 1900கள்தான்!

இந்தப் பழங்கால ஆற்றுச் சமவெளி நாகரிகம், இன்றைய பாகிஸ்தானும், வடமேற்கு இந்தியாவும், அரபிக் கடலுக்குள் மறைந்த சில பகுதிகளுமே. இந்த நாகரிகத்துக்கு ஹரப்பா நாகரிகம் என்றும் பெயர். ஏன் தெரியுமா? ஹரப்பா என்ற ஊரில் இந் நாகரிக அழிவுகளின் மிச்சங்களை தோண்டி எடுத்தனர். ஆகவே இது 'ஹரப்பா

சிந்துவெளி நாகரிகம் செழித்த காலத்தில் அங்கே அருகில் 'சரஸ்வதி நதி' ஓடியதாகச் சொல்லப்படுகிறது.

ஹரப்பா நாகரிகத்துக்கு முன்பு



• ஆபரணக் கற்கள்

கி.மு.6500களிலேயே மக்கள் மாடு மேய்பதைத் தொழிலாகக் கொண்டு கூட்டமாக ஓரிடத்தில் தங்கி வாழத் தொடங்கினர். இந்தக் கூட்டுச் சமூக வாழ்க்கை முறைக்கு 'கிராம வாழ்க்கை' என்றும் பெயரிட்டனர். உலகச் சரித்திரத்தின் 'முக்கியமான சமூக மாற்றங்கள்' ஆடு, மாடு மேய்ப்



பவர்களால்தான் உருவானவை என்று சமூகவியலாளர்கள்' குறிப்பிடுகின்றனர்.

சிந்துவெளி/ஹரப்பா மக்கள்,



• டெரகோட்டா



ஹரப்பா!



• ஆறு ஓடிய இடம்...

விவசாயம் செய்யுமுன்பே நான்கு பக்கங்கள் உள்ள சாதாரண வீடுகளும் கட்டினர். அவை காற்றில் உலர வைத்த மண் கற்களால் கட்டப்பட்டவையே! கிராமம் உருவாகி, வீடு கட்டியதும், மக்க்ள் கால்நடைப் பராமரிப்பை மேற்கொண்டிருக்கின்றனர். பலவகை காட்டு விலங்குகளை வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தினர். கி.மு.5500-களிலேயே பானைகள் செய்தனர்.

தெற்கு மற்றும் மேற்கு ஆசியர்களிடம் கி.மு.6000-4500களில் 'அலாமைட்' என்ற மொழியின் துவக்க நிலை காணப்பட்டது. இதிலிருந்தே அனைத்து திராவிட மொழிகளும் உருவாயின என நம்பப்படுகிறது! இந்தக் காலத்தில் கருங்கல்லினாலான பொருட்கள், கருவிகள், குகை

* ஹரப்பா மக்கள்...



களில் ஓவியங்கள் வரைதல், கற்களில் செதுக்குதல் போன்ற மனிதர்களின் கைத் திறமைகள் வெளிப்படலாயின!

ஹரப்பா வாழ்க்கை முறை விவசாயத்தைச் சார்ந்ததாகவே இருந்தது. இவர்கள் மெசபடோமியா, சுமேரிய மக்களுடன் வாணிபத் தொடர்பு வைத்திருந்தனர். விவசாயக் கருவிகளையும், ஆயுதங்களையும் தாமிரம், வெண்கலத்திலிருந்தே செய்தனர். இரும்பின் உபயோகம் அறியப்படவில்லை. பருத்தி ஆடை நெய்து, வண்ணம் தோய்த்து உடுத்தினர். பலவிதமான காய்கறிகள், பழங்களை, விளைவித்தனர். கிராம - நகர வாழ்க்கை முறைகள் வேறுபட்டன.

சிந்துவெளி மக்கள், ஒழுக்கத்திலும், பழைமைவாதத்திலும் மிகுந்த ஈர்ப்பு உள்ளவர்கள். நுட்பமான கலைநுணுக்கம் வாய்ந்த பொருட்களை ஏராளமாக உலோகம், கற்கள், முத்திரைகளில் செய்திருக்கின்றனர். ஹரப்பா, மொஹஞ்சதாரோவில் தோண்டி எடுக்கப்பட்ட, சிறிய தட்டையான, சதுரமான பொருட்களில் மனித உருவங்கள் துல்லியமாய் வரையப்பட்டுள்ளன. அதிலுள்ள எழுத்துகள், எண்ணா, எழுத்தா, எனச் சரியாக விளங்கவில்லை. இவை திராவிட, சமஸ்கிருத எழுத்துக்களின் முன்னோடியாக இருக்கலாம்.

நகரத்தில் வாழ்ந்தவர்கள், வாணிபம் செய்தனர். கைவினைஞர்கள், சிறந்த விற்பன்னர்களாக இருந்தனர்!

தங்கம், தாமிரம், வெள்ளி, ஈயம், பித்தளை, நீலப் பச்சைக்கல், புஷ்பராகம் பதிக்கப்பட்ட, பளபளப்பான

பானைகள், அழகான மதிப்பு மிகுந்த கற்களை வர்த்தகம் செய்தனர். எல்லா வகை முத்திரைகளும் (நம்மூர் அலுவலக சீல் போல) காணப்பட்டன. அதில் விலங்குகள், கடவுள், எழுத்து உருவங்கள் இருந்தன.


ஹரப்பா மக்கள் நீளம், எடை, நேரத்தைத் துல்லியமாக அளந்தனர். இதற்கான எடை அளவுகளை முதலில் உருவாக்கியவர்கள், சிந்து வெளி மக்களே. அளவீடுகளில் மிக மிகத் துல்லியமான, சிறிய அளவீடும் உள்ளது. ஆறு முகம் கொண்ட, முப்பரிமாண எடைக் கற்கள் இருந்திருக்கின்றன.

இவர்களின் மிகப் பெரிய, தலைசிறந்த கண்டுபிடிப்பு, தொடுவான கோணத்தை அளக்கும் கருவியே! கிட்டத்தட்ட 9000 வருடங்களுக்கு முன்பே 'பல் மருத்துவம்', பற்களைத் துளை செய்து அடைத்தல் போன்றவை இருந்திருக்கின்றன. தங்கத்தைச் சோதனை செய்யும் 'உரைகல்'லும் உண்டாம்!



பானை

சிந்துநகரத் தெருக்கள் வானவியல் அடிப்படையில் அமைந்துள்ளன. தெருவில் சூரியகுச்சி கடிகாரம் இருந்திருக்கிறது! 'விண்மீன் நாட்காட்டி' முறையும் இருந்திருக்கிறது! சந்திர உதயம், சூரிய உதயம் பார்த்து, நேரமும் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ஹரப்பா குருமார்கள் புதன், வெள்ளி, சனி போன்ற கோள்களை அறிந்திருந்தனர்.



கழிவு நீர் பாதை

சிந்துசமவெளி நாகரிகம் திடீரென மறையவில்லை. கி.மு.1800களில், ஏற்பட்ட கால நிலை மாற்றம், சீதோஷ்ண நிலைத் தாக்கத்தை அம்மக்களால் தாக்குப் பிடிக்க முடியவில்லை! நிலம் திடீரென குளிர்ந்தது; உலர்ந்தது. ஹாக்கர் – ஹர்கா நதிப் பகுதிகள் பூமித்தட்டு நகர்வால் மறைந்தே போயின.

நினைவு அட்டவணை

உங்களுடைய தேர்வுத் திட்டமிடலில் **கோகுலம்** ஒரு சிறிய பங்காற்றுகிறது. கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைக் கத்தரித்து எடுத்து கொள்ளுங்கள். முதலில் தேர்வின் பெயர், தேர்வு நாள் ஆகிய காலங்களைப் பூர்த்தி செய்து புத்தகப் பையிலோ கண்ணில் படும் இடத்திலோ வைத்து விடுங்கள். தேர்வு நாட்களில் பள்ளிக்குச் செல்லும் முன்பு பேனாவில் 'இங்க்' இருக்கிறதா? பென்சில் மற்றும் தேர்வுக்குத் தேவையானவை இருக்கின்றனவா என்பதைப் பார்த்து டிக்(✓) அடியுங்கள். இது உங்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.



வரிசை எண்	தேர்வு நாள்	தேர்வின் பெயர்	பேனாவில் இங்க்	பென்சில், ரப்பர்	மற்றவை
1					
2					
3					
4					
5					
6					
7					
8					
9					
10					



திருச்சியிலிருந்து எழுபது கி.மீ தூரத்தில் இருக்கும் வையம்பட்டி அருகே, ப.குரும்பப்பட்டி எனும் குக்கிராமம். சுமார் நூற்றைம்பது வீடுகள். அங்கு ஓர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி. தலைமையாசிரியர் மற்றும் உதவி ஆசிரியர் என ஈராசிரியர் பள்ளி அது. ஐந்து வகுப்புகளிலும் மொத்த மாணவ - மாணவிகள் அறுபது பேர் மட்டுமே.

சென்ற ஆண்டில் அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தில், அந்தப் பள்ளியின் பொன்விழா கொண்டாடப்பட்டது. மாணவ - மாணவிகள் இடையே அப்போது திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடந்தது. பத்து குறள், இருபத்தைந்து குறள், முப்பது குறள் என்று ஒரு சிலர் ஒப்புவித்தனர். அப்போது மூன்றாம் வகுப்பு



■ அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களிடம் பரிசு பெறும் தீபா...

13+1330 = 9!

மாணவியான ஒன்பது வயது தீபா, சுமார் நூற்றைம்பது திருக்குறளை ஒப்புவித்து முதல் பரிசினைத் தட்டிச் சென்றார்!

அதன் பின்னர் கடந்த ஓராண்டில் தலைமையாசிரியர் ஆரோக்கியசாமி மற்றும் உதவி ஆசிரியர் சண்முகநாதன் இருவரின் வழிகாட்டுதல், தீவிர பயிற்சியின் பலனாக தற்போது அந்த மாணவி ஆயிரத்து முன்னூற்றி முப்பது திருக்குறளையும் மனப்பாடமாக ஒப்புவித்து வருகிறார்!

ஏதேனும் ஒரு திருக்குறளின் எண்ணினை மட்டும் கூறினால் போதும். அடுத்த நிமிடமே அந்த எண்ணுக்கு உரிய குறளை கடகடவெனச் சொல்லி விடுகிறார். எண்கள்



The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil Monthly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Monthly
3. Name of Printer	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor	:	Seetha Ravi
Nationality	:	Indian
Address	:	'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total captial: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2007

Lakshmi Natarajan
Publisher

ஒரு வரிசைப்படிதான் இருக்க வேண்டும் என்றில்லை.

சமீபத்தில் திருச்சியில் நடந்த 'மண்டல பள்ளி வளர்வு ஆய்வு' மாநாட்டு மேடையில், மாநில பள்ளிக் கல்வித் துறை இயக்குனர் உமா மகேஸ்வரி, தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர், பார்வையாளர்கள் மத்தியில் அரங்கில் பரிசோதித்துப் பார்த்தனர். என்ன ஆச்சர்யம்! அவர் கீழிருந்து மேலாக, மேலிருந்து கீழாக மாறி மாறிக் கேட்ட எண்களுக்குரிய திருக்குறளை அவ்வப்போது தடையின்றி கடகடவெனச் சொல்லி முடித்தார் தீபா.

ஆச்சர்யம் அடைந்த அமைச்சர் பரிசளித்துப் பாராட்டினார்.

அந்தப் பள்ளிக்கு நேரில் சென்று மாணவி தீபாவைச் சந்தித்தோம். கையடக்க திருக்குறள் புத்தகத்தை நம்மிடம் கொடுத்து முதல் குறளிலிருந்து ஒப்புவிக்கலானார். மொத்தம் ஆயிரத்து முன்னூற்று முப்பது திருக்குறளையும், பதிமூன்று நிமிடங்களுக்குள் ஒப்புவித்தார். மிகச் சரியாக 12 நிமிடம், 26 வினாடி.

கடந்த இரண்டு மாதங்களாக யோகா மற்றும் தியானப் பயிற்சியிலும் ஈடுபட்டு வருகிறார்.

அவரது அப்பா செல்வேந்திரன், கிராமத்தில் சலவைத் தொழிலாளி. அம்மா முருகாயி விவசாயக் கூலி வேலைகளுக்குச் செல்கிறார். "நல்லா படிச்சு டாக்டராகி, குறள் வழி வாழ்வதே என்னுடைய நோக்கம்!" எனக் கூறுகிறார் தீபா. இவரைப் போல எத்தனையோ சிறுவர், சிறுமிகள் திருக்குறளை ஒப்புவிக்கிறார்கள். ஆனாலும் ஒரு குக் கிராமத்தில் உள்ள தீபா இதைச் செய்வது சாதனைதான் அல்லவா?

- கட்டுரை, படம்:
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



நீங்கள் மிகவும் விரும்பும் கோகுலம்
உங்கள் வீடு தேடி வர
சந்தா செலுத்துங்கள்.



பெயர்:..

முகவரி:..

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

தேர்வு வருது!



தேர்வு வருது தேர்வு வருது
தயாரா நீங்க?
ஜெயிப்பதற்கு ஜெயிப்பதற்கு
தயாரா நீங்க?

ஓட்டம் ஆட்டம் விளையாட்டை
ஒத்தி வையுங்க
ஓரிடத்தில் இருந்தபடி
ஊன்றிப் படியுங்க!


விடியலிலே விடியலிலே
படிக்க வேணுங்க!
விஷயங்களை மனத்தினிலே
பதிக்க வேணுங்க!

பதற்றமின்றி பயமின்றி
பரீட்சை எழுதுங்க!
நிச்சயமா நிச்சயமா
ஜெயிக்க முடியுங்க!

- ஆர். தீபா,
பி.காம் முதலாண்டு,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி,
சென்னை

உழைப்பும், துடிப்பும்!





பூப் பூவாய் தாவும் தேனீ
　　என்ன செய்யுது?
பூவிலுள்ள தேனை வாயால்
　　உறிஞ்சி எடுக்குது!

துளித் துளியாய் எடுத்த தேனைக்
　　கூட்டில் வைக்குது
துன்பத்திலே உதவும் என்றே
　　துடிப்பாய்ச் சேர்க்குது!

ஆடி ஓடி உழைத்துப் பொருளைச்
　　சேர்த்திட வேணும்
அதையும் நன்றாய்க் கருத்துடனே
　　காத்திட வேணும்!

\- மு. நடராசன், புதுச்சேரி

பற்கள்!



முத்து முத்தாய் எல்லோர்க்கும்
முளைக்கும் பற்கள் பின்னாளில்
சொத்தைப் பற்கள் ஆவதேன்?
சுத்தமின்றிப் போவதேன்?

வெண்மையான பல்லிடுக்கில்
வெந்த உணவு தங்கிடும்
நின்ற உணவுத் துகள்கள் பல்
நிறத்தை மெள்ள மாற்றிடும்

பற்கள் போனால் முகத் தோற்றம்
பாழாய்ப் போகும் அறிவீரே
அற்பமாக எண்ணாமல்
அழகாய்த் தேய்த்துக் காப்பீரே!

\- அழகனார்

● **ஆ.மணிமேகலை, ஊட்டி**

? குழந்தைகளுக்குப் பார்வைக் கோளாறு உள்ளது என்று எப்படித் தெரிந்து கொள்வது?

! குழந்தை கரும்பலகையில் உள்ள சிறிய எழுத்துகளைப் படிக்க சிரமப்படும். தொலைக்காட்சியைப் பார்க்கும்போது கண்களைச் சுருக்கிப் பார்க்கும். புத்தகங்களைப் படிக்கும் போது முகத்திற்கு அருகில் வைத்துக் கொள்ளும். அடிக்கடி கண்களைக் கசக்கும். தலைவலி வரும். இமைகள் வீங்கும். இந்த அறிகுறிகளில் ஏதாவது குழந்தையிடம் காண நேர்ந்தால், உடனே கண் பரிசோதனையைச் செய்து கொள்ள வேண்டும்.

● **ப.பாஸ்கரன், கள்ளக்குறிச்சி**

? பற்களில் கறுப்புக்கரை உண்டாவது ஏன்?

! குடிநீரில் ஃபுளோரைடு எனும் வேதிப்பொருள் அளவுக்கு மீறி இருந்தால் பற்களில் கறுப்புக்கரை உண்டாகும். பற்களைச் சுத்தமாக வைத்திருக்கத் தவறினால், இவ்வாறு ஏற்படும். அடுத்து, புகைபிடித்தல், புகையிலை போடுதல் போன்ற தீய பழக்கங்களும் இதற்குக் காரணமாகலாம். இரும்புச்சத்து டானிக், டெட்ராசைக்ளின் மாத்திரை ஆகியவற்றாலும் இவ்வாறு ஏற்படலாம்.

● **கமலா ரத்தினம், கடலூர்**

? என் மகளுக்குப் பத்து வயது ஆகிறது. அரிசி, விபூதி போன்றவற்றைச் சாப்பிடுகிறாள். இது ஏன்? எப்படித் தவிர்ப்பது?

! உடலில் இரும்புச்சத்து, துத்தநாகச்சத்து, ஃபோலிக் அமிலம் போன்றவை குறைவாக இருந்தால், உணவு அல்லாத பிற பொருள்களைச் சாப்பிடத் தோன்றும். இவர்களுக்கு ரத்தச்சோகை இருக்கும். முதலில் இம்மாதிரி குழந்தைகளுக்குக் குடல்புழு மாத்திரை தர வேண்டும். இரும்புச்சத்தும் துத்தநாகச்சத்தும் கலந்த மாத்திரைகள் அல்லது டானிக் தரலாம். தினமும் ஒரு கீரை, பச்சைக் காய்கறிகள், பேரீச்சம்பழம், வெல்லத்தில் தயாரித்த கடலை உருண்டை, எள்ளுருண்டை, தக்காளி, ஆரஞ்சு, உலர் திராட்சை, முட்டை, பால், இறைச்சி போன்றவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொண்டால் இந்தப் பழக்கம் குறைந்துவிடும்



செயற்கை





அழுக்காக மாறும். பட்ஸை 'விக்விட் பாரபின்' எனும் திரவத்தில் முக்கியெடுத்த பின்பு காதை ஒட்டி நுழைத்துச் சுற்றியெடுக்க வேண்டும். நேராக பட்ஸை நுழைத்து அழுக்கைக் காதுக்குள்ளேயே தள்ளி விடக்கூடாது. வாரம் ஒரு முறை மட்டுமே பட்ஸ் கொண்டு அழுக்கை எடுக்கலாம். அடிக்கடி அவ்வாறு செய்தால் செவிப்பறை பாதிக்கப்படும்.

வயிறு!

• ஆ. ஞானபண்டிதன்,

மதுரை - 20

? பள்ளியில் படிக்கும் வயதில் குழந்தைகள் எத்தனை மணிநேரம் தூங்க வேண்டும்?

! தினமும் 6 மணி முதல் 8 மணி நேரம் தூங்க வேண்டும்.

• மா.வெண்ணிலா,

பாண்டிச்சேரி

? காதில் அழுக்கு எவ்வாறு சேருகிறது? அதை 'பட்ஸ்' கொண்டு எடுப்பது நல்லதா?

! காதில் உள்ள தோல் சுரப்பிகள் இயற்கையாகச் சுரக்கும் ஒருவித சுரப்புநீர் உருண்டு திரண்டு கடினமாகும்போதும் சுரப்பு நீரில் வெளிப்புறமிருந்து வரும் தூசு சேரும்போதும்

தகவல் பெட்டி

1. வைட்டமின்-சி, வைட்டமின்-ஈ இவ்விரண்டும் உடலில் நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகப்படுத்துகின்றன.


2. வயிற்றுப்புண்ணை உண்டாக்கும் கிருமியின் பெயர் ஹெச்.பைலோரி.

3. காசநோய்க்குக் 'காக்ஸ் நோய்' என்று மற்றொரு பெயருண்டு.

4. மருத்துவர் நோயாளியை நேரில் பார்க்காமல் கணினி வழியே பரிசோதித்து சிகிச்சை தருகின்ற புதிய மருந்துவத் தொழில்நுட்பத்துக்கு 'டெலிமெடிசின்' என்று பெயர்.

5. செயற்கைக்கால், செயற்கைப் பல், செயற்கைமூட்டு இவ்வரிசையில் இப்போது செயற்கை வயிறு சேர்ந்துள்ளது. ஆம், அண்மையில் இங்கிலாந்தில் 'செயற்கை வயிறு' கண்டுபிடித்திருக்கிறார்கள். இரைப்பைப் புற்றுநோய் வந்தவர்களுக்கு இந்தச் செயற்கை வயிற்றைப் பொருத்தி சிகிச்சை தருகிறார்கள்!

தாகூர் தொலைத்த பெட்டி!



● இந்தியாவில் மட்டுமல்ல, ஆசிய அளவில் கூட முதலில் நோபெல் பரிசு பெற்றவர் ரவீந்திரநாத் தாகூர்தான். எட்டு வயதிலேயே 'பானுசிங்கோ' என்ற பெயரில் கவிதைகளை எழுதத் தொடங்கினார். குருதேவ் என்றும் அழைக்கப்பட்டார்.



● கீதாஞ்சலி என்பது ஒரு கவிதை மட்டுமல்ல, அது ஒரு கவிதைத் தொகுப்பின் பெயர். அது வங்காள மொழியில் எழுதப்பட்டது. பின் தாகூராலேயே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

● இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்றபோது கையினால் எழுதப்பட்ட தனது அத்தனை மொழி பெயர்ப்புகளையும் ஒரு பெட்டியில் வைத்திருந்தார் தாகூர். அந்தப் பெட்டி தொலைந்து விட்டது. பெட்டியைத் திருடியவர், லண்டன் சுரங்க ரயில் பாதையில் சத்தம் போடாமல் வைத்து விட்டுப் போய்விட்டார்.

● ஜாலியன் வாலா பாக் படுகொலைகளைத் தொடர்ந்து, ஆங்கிலேய அரசு தமக்கு வழங்கிய 'சர்' விருதினை மறுத்தார்.

● 'ஜனகணமன' எனத் தொடங்கும் இந்தியாவின் தேசிய கீதத்தை இவர் எழுதியது உங்களுக்குத் தெரிந்திருக்கும். வங்க தேசத்தின் தேசிய கீதமான 'ஷோனார் பங்களா' எழுதியதும் இவர்தான்.

● கவிதைகள் மட்டுமல்ல, பல புதினங்களையும் எழுதியிருக்கிறார். கோரா, நௌக்கதர், விபராஜா அவுர் ராணி போன்றவை இவர் எழுதிய புதினங்கள்.

● சாந்திநிகேதன் என்பது இவரது தந்தையின் எஸ்டேட் பெயர். அது மேற்கு, கிழக்கு ஆகிய இரு மதிப்பு மிகுந்த கலாசார இணைப்புகளின் கல்வி நிறுவனமாக வேண்டும் என்ற எண்ணத்தில்தான் 'சாந்தி நிகேதன்' என்ற அமைப்பைத் துவக்கினார் தாகூர். இது நாளடைவில் 'விஸ்வ பாரதி' என்ற பல்கலைக்கழகமாக வளர்ந்தது.

● ரவீந்திரநாத் தாகூர் தமது எண்பதாவது வயதில் இறந்தார்.

ஜி.எஸ்.எஸ்.



ஒரு நாள் மழை 'சோ' என கொட்டித் தீர்த்தது. தேங்கிய மழை நீரில் தவளை ஒன்று குதித்துக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது. அப்போது 'சொய்ங்' என சத்தமிட்டவாறு ஒரு கொசு வந்து தண்ணீர் மீது அமர்ந்தது.

''என்ன, தவளை அண்ணே! ரொம்ப சந்தோஷமா இருக்கிங்க போலிருக்கே?'' என்று கேட்டது.

''ஆமாம். மழை வந்தா எனக்குக் கொண்டாட்டமாச்சே!'' என்றது தவளை.

''என்ன பெரிய கொண்டாட்டம்? நீ எவ்வளவுதான் தாவித் தாவிக் குதிச்சாலும் இந்தக் குட்டையோடு முடிஞ்சுடும். இஷ்டப்பட்ட இடத்துக்கு உன்னால போக முடியுமா?'' என்று கேட்டது கொசு.

தவளைக்குப் புரியவில்லை ''என்ன சொல்றே?''

''நினைச்சா உன்னால மனுஷங்க வீட்டுக்குப் போக முடியுமா? ஆனா நான் அப்படியில்லை; அவங்க வீட்டுல சமையலறை, படுக்கையறை, பூஜையறைன்னு எங்கே வேணும்னாலும் போவேன், வருவேன்'' என்று பெருமையுடன் சொன்னது கொசு.

''எனக்கும் மனுஷங்களோட வீடுகளுக்குப் போகணும்னு ஆசைதான். ஆனா எங்களைப் பார்த்தாலே அவங்க விரட்டுவாங்களாம். அத

கொசுவின் பெருமை!



னாலதான் நான் போறதில்லை" என்றது தவளை.

"நீ சுத்த வேஸ்ட், அண்ணே. அவங்களோட வீடுங்க எப்படி எல்லாம் இருக்கும், தெரியுமா? நவீன விஞ்ஞானக் கருவிகள் எல்லாம் இருக்கும். அதையெல்லாம் பார்த்து அனுபவிக்கணும்'' என்றது கொசு.

"அதையெல்லாம் பார்க்கறதால நமக்கு என்ன லாபம்? நாம வாங்கப் போறோமா? உபயோகிக்கப் போறோமா?"

"அட போங்கண்ணே! நாம வாங்கலைன்னா என்ன? சும்மா பார்க்கலாமில்லே. உலகம் எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கலாமில்லே?"

"அது சரி. ஆனா உள்ளே போனா விரட்டுவாங்களே" என்று தயங்கியது தவளை.

"நாமதான் சாமர்த்தியமாப் போய் வரணும். வாழ்க்கைன்னா இந்த மாதிரி 'த்ரில்' இருக்கணும். இப்பகூட நான் போகப் போறேன். நீங்க வர்றீங்களா?'' என்று கேட்டது கொசு.

கொசுவின் பேச்சு தவளை மனத்தில் ஆசையைத் தூண்டியது. 'மனிதர்கள் வசிக்கும் வீட்டில் அப்படியென்ன அதிசயம் இருக்கிறது? போய்த்தான் பார்ப்போமே! ஏதாவது ஆபத்து என்றால் ஓடி வந்துடுவோம்' என்று எண்ணியது.

"சரி தம்பி, நானும் வருகிறேன்" என்றது தவளை.

"சபாஷ்! இப்பதான் நீங்க வீரமான தவளை! வாங்க போகலாம். கொசுன்னு என்னைச் சாதாரணமா நினைச்சுட்டு இருப்பீங்க. அங்கே வந்து பாருங்க, ஆறடி மனுஷங்களே என்னைப் பார்த்து எப்படியெல்லாம் பயப்படறாங்கன்னு தெரியும்" என்று பெருமையுடன் சொன்ன கொசு, 'சொய்ங்' எனப் பறந்தது.

தவளை கொசுவைப் பின் தொடர்ந்தது.

இரண்டும் ஒரு வீட்டின் வாசலுக்கு வந்தன. அங்கே ஜன்னல்கள் மூடப்பட்டிருந்தன. வாசல் கதவு மட்டும் திறந்திருந்தது. "தவளை அண்ணே எப்படி சாமர்த்தியமா உள்ளே போறேன்னு பாரு. ஊ...லா லல்லா..." என்று பாடியவாறு கொசு உள்ளே நுழைந்து விட்டது.

தவளை மெதுவாக வீட்டுக்குள் எட்டிப் பார்த்தது. 'அடேங்கப்பா! எவ்வளவு பெரிய வீடு! எத்தனை விதமான பொருட்கள்? மனிதர்கள் கொடுத்து வைத்தவர்கள். வாழ்க்கையை நன்றாக அனுபவிக்கிறார்



கள்' என நினைத்தது.

உள்ளே சென்றிருந்த கொசு பறந்து வந்தது. "என்ன அண்ணே, இங்கே நின்னுட்டீங்க? இன்னும் உள்ளே வாங்க. இந்த மனுஷங்களை நான் என்ன பண்றேன்னு பாருங்க'' என்று சொல்லி விட்டுப் பறந்தது.

தவளை முன்னேறி வந்தது. கொசு நேராகச் சென்று ஒரு பெண்ணின் கையில் அமர்ந்தது.

"சே! இந்தக் கொசுங்க தொல்லை தாங்கலை. சாயந்திரமான போதும், வந்துடுமே'' என்ற பெண்மணி கொசுவை அடிக்க முயல, அது சட்டெனப் பறந்தது.

'எப்படி என் சாமர்த்தியம்!' என்பதைப் போல் தவளையைப் பார்த்தது. பிறகு மீண்டும் பறந்து சென்று ஓர் ஆணின் தோள் பட்டையில் அமர்ந்தது.

உடனே அந்த மனிதன் உள்ளங் கையைக் குவித்துப் 'பட்'டென அடித்தான். அவ்வளவுதான்! கொசு 'சொத்' எனத் தரையில் விழுந்தது. இதைக் கண்ட தவளை அதிர்ந்தது.

அது தப்பித்தோம், பிழைத் தோம் எனத் தாவி வெளியே வந்தது. பெண்மணி கதவைச் சாத்தும் முன்பு அந்தக் கொசுவைத் தூக்கி வீசினாள். அது தவளைக்கு அருகே வந்து விழுந் தது.

அப்போது கொசுவின் உடலில் சிறிது உயிர் ஒட்டியிருந்தது. மெது வாக அசைந்தது. தவளை "கொசு தம்பி, உன்னோட பெருமையைத் தெரிஞ்சுகிட்டேன். அதோடு உன்னை மாதிரி ஆட்களோட பேச்சை நம்பி வந்தா என்ன ஆகும்ன்னும் தெரிஞ்சு கிட்டேன். நான் வரேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றது.

- பா.சு.ஸ்ரீநிதி,
ஐந்தாம் வகுப்பு,
ஆல்ஃபா ப்ளஸ் நர்சரி பள்ளி,
திருச்சி

1000/-ரூபாய்



பரிசுப் போட்டி முடிவு!

ஜனவரி இதழில் அறிவித்த பரிசுப் போட்டியில் வழக்கம் போல் நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டு அசத்தி விட்டீர்கள். பெரும்பாலானோர் சரியான விடைகளையே எழுதியிருந்தீர்கள். ஆகவே வழக்கம் போல் குலுக்கல் மூலம் ஐந்து பேரைத் தேர்வு செய்து, தலா ரூ.200/- வீதம் பரிசுத் தொகை பகிர்ந் தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள்:

1. டிராக்டர், 2. வைக்கோல், 3. ஐயனார் சாமி, 4. ஏணி, 5.நாற்று

பரிசு பெறுவோர்:

1. **சு.அனிதா,** பத்தாம் வகுப்பு, காரப்பேட்டை பெண்கள் மே.நி.பள்ளி, தூத்துக்குடி.

2. **சி.தில்லைசாமி,** எட்டாம் வகுப்பு, சங்கரா நடுநிலைப்பள்ளி, கடையநல்லூர்

3. **ர.போஜராஜன்,** ஐந்தாம் வகுப்பு குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிக் குலேஷன் மே.நி.பள்ளி, மயிலாடுதுறை.

4. **பா.அன்னபூரணி,** ஒன்பதாம் வகுப்பு, அரசினர் உயர்நிலைப் பள்ளி, அம்மையகரம்.

5. **வி. ஸ்டேன்லி ஜோன்ஸ்,** பத்தாம் வகுப்பு, நகர மேனிலைப் பள்ளி, கும்பகோணம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி!



க.பாண்டியராஜன்
ஒன்பதாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி,
அரித்துவாரமங்கலம்







கே. நிவேதா,
எட்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி



பி.ஐஸ்வர்யா,
நான்காம் வகுப்பு,
செயின்ட் ஜான்ஸ்
ஆங்கிலப் பள்ளி, சென்னை



சு.தரங்கிணி,
ஏழாம் வகுப்பு,
ரு.சு.வி. பள்ளி,
குனியமுத்தூர்



உங்கள் கைவண்ணம்!

த.மௌரியா,
ஏழாம் வகுப்பு,
கீர்த்திமான் மெட்ரிக் மே.நி.பள்ளி,
கணுவாய்



டி.மணிகண்டன்,
ஐந்தாம் வகுப்பு,
பாரதி நடுநிலைப்பள்ளி,
கள்ளகுளத்தூர்





மகாகவி சுப்ரமணிய பாரதி

திரு. சின்னசாமி இலக்குமி அம்மையார் தம்பதியரின் மகனாக 11-12-1882 ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டத்தின் எட்டய-புரத்தில் பிறந்தவர் சுப்ரமணிய பாரதி. உயர்குலத்தில் பிறந்த பாரதி பொது மனிதனாக வாழ்ந்தார்.

இ. கோகுல்,
நான்காம் வகுப்பு, தொன் போஸ்கோ மெ.நி.பள்ளி, தஞ்சாவூர்.



நாம் யாவரும் நமது உழைப்பை நாட்டிற்காக எந்த அளவுக்குத் தருகின்றோமோ, அந்த அளவுக்கே நம்மால் உலக அரங்கில் உயரமுடியும்.

அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம் - இவற்றை உயிரினும் மேலாகக் கொண்டு நம் நாட்டை உயர்த்திடப் பாடுபடுவோம்.

மு. வர்ஷிணி,
மூன்றாம் வகுப்பு, காந்தி நகர் மெ.நி.பள்ளி, திருவண்ணாமலை.



• டாக்டர். இராதாகிருஷ்ணன் 1888 ஆம் ஆண்டு, செப்டம்பர் 5 ஆம் நாள் திருத்தணியில் பிறந்தார்.

• இவரது தந்தையார் திரு. வீராசாமி; தாயார் திருமதி. சீதம்மாள்.

ஆசிரியராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்தார்.

தே. ஸ்ருதி,
ஐந்தாம் வகுப்பு, பாரதி வித்யா பவன், ஈரோடு.



கடந்த ஆறு மாதங்களாக நம் நாட்டில் பரப்பரப்பாகப் பேசப்படும் விஷயங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று சிக்குன்குனியா; மற்றொன்று டெங்கு! ஆப்பிரிக்கா நாடுகளில் காணப்படும் ஒரு மரம் நன்கு வளர்ந்தபின் வளைந்து போகுமாம்! அந்த மரத்தின் பெயரிலிருந்துதான் சிக்குன்-குனியா என்ற சொல் வந்ததாக கூறப்படுகிறது.

கோ. வாணி பார்வதி,
எட்டாம் வகுப்பு, டால்பின் மெட்ரிகுலேஷன் பள்ளி, மதுரை.

பொன்மொழிகள்

1. ஆதிபகவன் முதற்றே உலகு
2. பெற்றோரை வணங்கு
3. தாயே தெய்வம்
4. தந்தை சொல் கேள்
5. கற்றாரோடு பழகு
6. தோல்வியில் கலங்கேல்



எம். பூர்ணிமா,
இரண்டாம் வகுப்பு,
அங்கப்பா சி.பி.எஸ்.சி. செகண்டரி ஸ்கூல்,
கோயம்புத்தூர்.

உற்ற நண்பனாயினும் நம் இரகசியங்களை வெளிப்படுத்தி நம்மை [illegible] வேண்டாம் - [illegible].

மற்ற எல்லா [illegible] விட [illegible] சிறந்த [illegible] — அரிஸ்டாட்டில்

[illegible] மிக உன்னதமான நட்பு — பேகன்

[illegible] இருப்பது ஆபத்து எல்லோரையும் நம்புவது மோசமானது — [illegible]



ரா. ஸ்ரீராம்,
நான்காம் வகுப்பு,
தேவி அகடெமி சீனியர்
செகண்டரி ஸ்கூல், சென்னை.

ஐசக் நியூட்டன்

1642-ல் இங்கிலாந்தில் பிறந்தார். இவர் தனது கல்லூரிப் படிப்பை டிரினிடி, கேம்பிரிட்ஜ் ஆகிய புகழ் பெற்ற கல்வி நிலையங்களில் பயின்றார். [illegible] பற்றிய கண்டுபிடிப்பை தனது இருபத்து நான்கு வயதிலேயே நிகழ்த்தி அனைவரின் கவனத்தையும் கவர்ந்தார்.



ச. அன்னபூரணி,
நான்காம் வகுப்பு, கலாமந்திர் மெட்ரிக்குலேஷன் உயர்நிலைப் பள்ளி, சென்னை.



சூப்பர் கையெழுத்து!

கண்டுபிடியுங்கள்!

பரிசு ரூபாய் 1000/-



இங்கே ஐந்து சிலைகளின் நிழல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கவனித்துப் பெயர்களைக் கண்டுபிடியுங்கள். விடைகளை எழுதியனுப்புங்கள். உங்கள் பெயர், படிக்கும் வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரி ஆகியவற்றை அவசியம் குறிப்பிடுங்கள். இங்குள்ள முகவரிக் கூப்பனை ஒட்டி எங்களுக்கு அனுப்புங்கள். சரியான விடையளிக்கும் ஐந்து பேர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.


கடைசித் தேதி: **15.3.2007**

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032


கோகுலம் தீம் பார்க்
வேடிக்கை
விளையாட்டு
புதிர் உலகம்
உங்களை
அன்புடன் வரவேற்கிறது
உங்கள் சின்னஞ்சிறு கைகள்,
பளபள கண்கள், சுட்டியான மூளை
அனைத்துக்கும் சவால்!

வழியைக் காட்டுங்கள்!

முரளி பள்ளிக்குச் செல்ல சரியான வழியைக் காட்டுங்கள்!





ஒன்று முதல் 31 வரையிலான புள்ளிகளை இணையுங்கள். இங்கே இருப்பது யாரெனத் தெரிந்துவிடும்.

புள்ளிகளை இணையுங்கள்!

குட்டீஸ் கோகுலம்



இங்குள்ள மரத்தில் சில உயிரினங்களின் உருவங்கள் ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்க, பார்க்கலாம்!

விடை 47-ஆம் பக்கம்.

உருவங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கிடையே எத்தனை வித்தியாசங்கள் உள்ளன வென்று கண்டுபிடியுங்கள்! விடை 47-ஆம் பக்கம்.





எத்தனை வித்தியாசங்கள்?



புதுமைப் போட்டியின் இறுதி கட்டத்துக்கு வந்து விட்டோம். ஒவ்வொரு மாதமும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு கோகுலத்துக்குப் புதிய நண்பர்களை அறிமுகம் செய்து வைத்த உங்கள் அன்புக்கு மிக்க நன்றி. சரியான தேதிக்குள் எங்களுக்கு வந்த கூப்பன்களை உடனுக்குடன் சரி பார்த்து நண்பர்களுக்கு இலவசப் பிரதியை அனுப்பினோம். தாமதமாக வந்த கூப்பன்களுக்கு அனுப்ப முடியவில்லை. எனினும் அவற்றையும் பத்திரப்படுத்தியுள்ளோம். இனி இந்த மாதம்தான்

புதுமைப் போட்டி - பரிசு கூப்பன்

போஸ்டரில் இடம் பெற்றுள்ள வாசகம் (விடை):

....

புதுமைப் போட்டியில் நான் அறிமுகம் செய்த

மொத்த நண்பர்கள் (கூப்பன்கள்) எண்ணிக்கை: ....

எனது பெயர் : ....

படிக்கும் வகுப்பு : ....

பள்ளி முகவரி : ....

தந்தை பெயர் : ....

வீட்டு முகவரி : ....

....

தொலைபேசி : ....

கோகுலம் நடத்தும் புதுமைப் போட்டியில் கலந்து கொள்கிறேன். மேலே பூர்த்தி செய்யப்பட்டுள்ளவை சரியான விவரங்கள் என்று உறுதியளிக்கிறேன். போட்டி நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

இப்படிக்கு

(கையொப்பம்)

போஸ்டரைச் சேகரிங்க!

புதுமைப் போட்டி

பாக்கி. இந்த இதழில் இரண்டு கூப்பன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று வழக்கமான, நண்பர்களை அறிமுகம் செய்யும் கூப்பன். மற்றொன்று இங்கே உள்ள கூப்பன்; இரண்டையும் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். போட்டிக்கு ரெடியா?

வழக்கம் போல் வலப் பக்க போஸ்டரில் கையொப்பமிட்டு உங்கள் நண்பருக்குக் கொடுத்து விடுங்கள். இடப் பக்க போஸ்டரை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். அதில் இரண்டு எழுத்துகள் இருக்கும். ஏற்கெனவே உங்களிடமுள்ள ஐந்து போஸ்டர்களில் தலா இரண்டு எழுத்துகள் உள்ளன. அவற்றைப் பார்த்து ஒழுங்குபடுத்தினால் ஒரு வாசகம் கிடைக்கும். அதைக் கண்டுபிடியுங்கள்! புதிதாக கோகுலத்தை வாங்க ஆரம்பித்தவர்களும் ஒன்றிரண்டு போஸ்டர்களைத் தொலைத்து விட்டவர்களும் கலந்து கொள்ள முடியாதா என்ற கேள்வி எழலாம். அனைவருமே பங்கு பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். ஆகவே பன்னிரண்டு எழுத்துகளும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி வாசகத்தைக் கண்டுபிடித்து அனுப்புங்கள். உங்களிடமிருந்து வரும் விடையும் கூப்பனும் சரி பார்க்கப்படும். யார் அதிகமான நண்பர்களை அறிமுகம் செய்தார்களோ, அவர்களை கோகுலம் நிஜமான தீம் பார்க் ஒன்றிற்கு அழைத்துச் செல்லும். மற்றவர்களுக்குப் புதுமையான பரிசுகள் உண்டு. ஆகவே ஆரம்பத்தில் பங்கு பெறாமல் போனவர்களும் தயக்கமின்றி கலந்து கொள்ளுங்கள்.

நீங்கள் அனுப்பும் கூப்பன் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.


ஆறு மாதங்களாக எங்களுக்கு வந்த புதுமைப் போட்டிக்கான கூப்பன்களின் அடிப்படையில்தான் முதல் பரிசுக்குரியோரின் பரிசிலனை நடைபெறும். நீங்கள் அனுப்பிய கூப்பன்கள் தபாலில் தவறி இருந்தாலோ, முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தாலோ நாங்கள் பொறுப்பல்ல. போட்டியில் கலந்து கொள்ளுங்கள்; பரிசுகளை வெல்லுங்கள். முடிவு தேதி: **30.3.2007**

போஸ்டர் எழுத்துகள்:

எ,ந,ள்,க,கோ,ங்,

ப,ண்,ல,ம்,ன்,கு

அன்புடன்
கோகு



பரிசுகளை வெல்லுங்கள்!


கோகுலம்
போஸ்டர்
ஹாய்! புதுமைப்
போட்டியில கலந்துகிட்டு
'தீம் பார்க்' போகலாம்,
வர்றியா?
ன்
கு


கோகுலம்
போஸ்டர்
ஹாய்! புதுமைப் போட்டியில கலந்துகிட்டு 'தீம் பார்க்' போகலாம், வர்றீயா?
அன்புடன்

குறுக்கெழுத்துப் புதிர்!

1		2		■		3		4
	■		■	5	■		■	
	■		6	■			7	■
	■	■		■		■	■	
■	8		9	■	10		■	
	■		■	11	■		■	
12		13		■		14		15

இடமிருந்து வலம்:

1. வ.உ.சி என்றதும் நினைவுக்கு வருவது (4)
5. நெருப்பு - வேறு பெயர் (1)
8. இதைக் கண்டால் படையே நடுங்குமாம் (3)
10. ஆண்பாதி; ________ பாதி (2)
11. நம் உடலிலுள்ள உறுப்பு (1)
12. அறிவியல் பொருட்களைக் கண்டுபிடிப்பவர் (4)

வலமிருந்து இடம்:

4. இந்த மரம்தான் புல்லாங்குழலாகிறது (4)
6. ஒரு நதியின் பெயர் (2)
7. கவிஞர்கள் எழுதுவது (3)
14. புத்திக் கூர்மைமிக்க ஓர் அமைச்சர் (4)

மேலிருந்து கீழ்

1. இதிலிருந்து சர்க்கரை தயாரிக்கப்படுகிறது (4)
2. இதில் குழந்தைகள் எழுதுவர் (3)
3. வயதானப் பெண்ணை இப்படிச் சொல்வர் (3)
4. தலைக்குள் உள்ளது (2)


கீழிருந்து மேல்:

9. பெண்கள் கட்டுவது (3)
10. இந்தப் பறவையை இரவில்தான் பார்க்க முடியும் (3)
12. கேள்வியை இப்படியும் சொல்வதுண்டு (2)
13. உலகத்துக்கு இன்னொரு பெயர் (3)
14. குழந்தைகளுக்கு இதில் மருந்து புகட்டுவர் (3)
15. இராணுவத்தில் பயன்படுத்துவது (4)


விடைகள் 47-ஆம் பக்கம்




யானை அண்ணாவுக்கும் ஆமைத் தம்பிக்கும் வண்ணம் தீட்டி அசத்துங்க, குட்டீஸ்!



வண்ணம் தீட்டுங்கள்!





மார்ச் என்றாலே தேர்வுதான் நினைவுக்கு வரும். நீங்கள் எல்லாம் தேர்வுக்காக மும்முரமாகப் படித்துக் கொண்டிருப்பீர்கள். கொஞ்சம் 'ரிலாக்ஸ்' செய்து கொள்ளவே இந்த விளையாட்டு.

இங்கே ஒரே அளவிலான பதினைந்து படங்கள் உள்ளன. இவை காலை

வேகம்! வேகம்!

❖ விளையாட்டு ❖ ❖ ராஜ் ❖



யில் தொடங்கி இரவு வரையிலான பாலுவின் ஒருநாள் நடவடிக்கைகள். இவற்றைக் கவனமாகக் கத்தரித்துக் கொள்ளுங்கள். ஒரு கெட்டியான தாளில் இதே போன்று பதினைந்து துண்டுகளைக் கத்தரித்துப் படங்களின் பின்பக்கம் ஒட்டுங்கள். இது படங்களின் முனைகள் கிழிந்து விடாமலும், மடங்காமலும் இருக்க உதவும்.

இனி விளையாடலாம். நண்பர்களை அழைத்துக் கொள்ளுங்கள். இந்த விளையாட்டுக்கு ஒரு நடுவர் தேவை. தாத்தா, பாட்டி போன்ற பெரியவர்கள் யாராவது இருந்தால் சிறப்பு. அவர் பதினைந்து படங்களையும் மாற்றி மாற்றி (சீட்டு கட்டுகள் போல்) வைத்து, மொத்தமாகச் சேர்த்து உங்களிடம் தர வேண்டும்.


பிறகு 'ஸ்டார்ட்' சொன்னதும் நீங்கள் படங்களைத் தரையில் காட்சிக் கோர்வையுடன் வரிசைப்படுத்த வேண்டும். அவகாசம் அறுபது நொடிகள் தாம்!

ஒரு நிமிடம் முடிந்ததும் நீதிபதி 'ஸ்டாப்' சொல்ல, நிறுத்திட வேண்டும். எத்தனைப் படங்களை நீங்கள் வரிசைப்படுத்தினீர்களோ, அதற்குத் தகுந்த மதிப்பெண்ணை நீதிபதி தருவார். பிறகு படங்களைக் கலைத்து, அடுக்கி அடுத்தவரிடம் தருவார்.

இப்படியே அனைவரும் விளையாட வேண்டும். யார் குறைந்த நொடிகளில் அதிகமான படங்களை வரிசைப்படுத்துகிறாரோ அவரே 'வின்னர்'.

இதைப் பல சுற்றுகளாகவும் விளையாடி மகிழலாம். படங்களைக் கலைத்து, அடுக்கித் தருவதும் நேரத்தைக் கவனிப்பதும் நடுவரின் பொறுப்பு. என்ன, விளையாட ஆரம்பிச்சுட்டீங்களா?

ஜாலியா விளையாடுங்க. அதே சமயம் தேர்வுக்கும் கவனமாகப் படியுங்க. நல்லா மதிப்பெண் எடுங்க. வாழ்த்துகள்!



நீங்கள் வரிசைப்படுத்தியதை சரி பார்த்துக் கொள்ளுங்கள்.

ஒளிந்துள்ள உருவங்கள்:

பாம்பு, மீன், யானை, கரடி

எத்தனை வித்தியாசங்கள்?

1. செடியில் பூக்கள் எண்ணிக்கை.
2. கரடியின் சட்டைப் பொத்தான்கள்.
3. யானையின் தந்தங்கள்.
4. புலியின் கையில் பேனா.
5. குரங்கு கையிலுள்ள தாள்.




குறுக்கெழுத்துப் புதிர் விடை:

1 க	ப்	2 ப	ல்	■	ல்	3 கி	ங்	4 மூ
ரு	■	ல	■	5 தீ	■	ழ	■	ளை
ம்	■	கை	6 வை	■	தை	வி	7 க	■
பு	■	■	டை	■	ந்	■	■	கி
■	8 பா	ம்	9 பு	■	10 ஆ	டை	■	ங்
ணா	■	ல	■	11 கை	■	லா	■	ர
12 வி	ஞ்	13 ஞா	ணி	■	ல்	14 பா	ர்	15 பீ

விடைகள் பக்கம்





உங்கள் பொறுமைக்கும் மனத்தை ஒருநிலைப்படுத்தும் தன்மைக்கும் ஒரு சவால்! இங்குள்ள படத்தில் மொத்தம் எத்தனை மொட்டுக்கள் உள்ளன? கூர்மையான பென்சிலைக் கொண்டு நிதானமாக எண்ணிக் கண்டுபிடியுங்கள்!

சவால்!

மீண்டும் சந்திப்போம்!

சிங்கம் போட்ட வேலி!

கதை : பி.புலேந்திரன் படம் : பிள்ளை




மற்ற விலங்குகள் யானை மாமாவிடம் சென்று முறையிட்டன.
சிங்கம் போட்ட வேலியால பழங்கள் இருக்கிற மரங்களுக்கு இனிமே போக முடியாது.
நாங்க ஆற்றில் தண்ணீர் குடிக்க சுத்திட்டுப் போக வேண்டியிருக்கு.
நீங்கதான் பெரியவர். சிங்கத்துக்கிட்டே பேசணும்.
சரி, பேசறேன்.
சிங்கத்தைச் சந்தித்த யானை பக்குவமாகப் பேசியது. ஆனால்...
இப்படி நீ தனியாக இருப்பது சரியல்ல. இந்தக் காடு உனக்கு மட்டும் சொந்தமல்ல.
அதெல்லாம் முடியாது. இந்த வேலிக்குள் யாரும் வரக்கூடாது.
என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது. எனக்கு யாருடைய தயவும் தேவையில்லை. நீங்க போகலாம்.
உனக்குப் பட்டால்தான் புத்தி வரும்.
சில நாட்கள் கழித்து கடுமையான மழை பெய்தது. ஆற்றில் வெள்ளம் பெருகியது.


அனைத்து விலங்குகளும் ஒன்றுகூடி பாதுகாப்பான இடத்தில் தங்கின.
சிங்கத்தைக் காணவில்லையே...
அது எப்படியாவது போகட்டும். நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?
அது தப்பு!
என்னதான் இருந்தாலும் சிங்கமும் நம் காட்டைச் சார்ந்தது. தேடிப் பார்ப்போம், வாருங்கள்.
அங்கே...
ஆற்று வெள்ளத்தால் வேலி உடைந்து சிங்கத்தின் குகை முழுவதும் தண்ணீர். அதில் தத்தளித்துக் கொண்டிருந்த சிங்கத்தை...
இந்தா, கயிற்றைப் பிடிச்சுக்க...
பலமா இழுங்க..
பின்னர்...
பலசாலி என்கிற ஆணவத்தில் உங்களை எல்லாம் மிகவும் துன்புறுத்தி விட்டேன். மன்னியுங்கள்!
பரவாயில்லை. ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதுதான் நல்லது. இதைப் புரிந்து கொண்டால் போதும்.

சென்ற இதழில்...

பானைகள் செய்யும் தொழிலாளியான பரதனுக்குக் குழந்தைகள் இல்லை. அந்தக் குறை நீங்க அவனும் மனைவி தமிழரசியும் தினமும் பிள்ளையாரை வணங்குகிறார்கள். பரதன் தனது ஏக்கம் தீர அடிக்கடி குழந்தை வடிவில் சில பானைகளைச் செய்து ஓர் அறையில் வைக்கிறான். ஒருநாள் அனைத்தும் உயிர் பெறுகின்றன. அவற்றுக்குக் குடிக்க பால் தருகிறார்கள். சந்தைக்குச் செல்கையில் மற்ற பானைகளுடன் அவற்றையும் அழைத்துச் செல்கிறார்கள். இனி...

பானைக் குழந்தைகள்!


அன்று விசேஷ தினம். ஆகவே சந்தையில் வழக்கத்தைவிட கூட்டம் அதிகமாக இருந்தது. குழந்தைகள் விளையாட ராட்டினம், பொம்மைகள், புசித்து மகிழ தின்பண்டங்கள் என கலகலப்பாக இருந்தது.

பரதனும் தமிழரசியும் பானைகளை இறக்கி வைத்ததும், அவை உற்சாகமாகத் துள்ளிக் குதித்தன. ''அடடா! இதுதான் சந்தையா? எவ்வளவு ஜோரா இருக்கு? எவ்வளவு மனிதர்கள்? எத்தனை கடைகள்? அப்பா, அம்மா நாங்க சந்தையைச் சுத்திப் பார்க்கணும்'' என்றது ஒரு பானை.

"நீங்க தனியாப் போகக் கூடாது!'' என்றாள் தமிழரசி.

''அப்படின்னா நீங்க ரெண்டு பேரும் கூட வாங்க'' என்றது மற்றொரு பானை.

"ரெண்டு பேரும் வந்



துட்டா வியாபாரத்தை யார் கவனிக் கறது? அப்பா மட்டும் வருவார்'' என்றாள் தமிழரசி.


பரதன் பானைக் குழந்தைகளுடன் சந்தையை வலம் வந்தான். கை, கால்கள் முளைத்த பானைகளை அனைவரும் அதிசயமாகப் பார்த்தனர். சிறுவர்கள் பின் தொடர்ந்தனர்.

''அப்பா அது என்ன? மேலே சென்று கீழே வருகிறதே...'' என்று கேட்டது ஒரு பானை.

''அதை ரங்கராட்டினம்னு சொல்வாங்க'' என்றான் பரதன்.

"நாங்களும் அதில் போகிறோம்" என்றது மற்றொரு பானை.

''வேண்டாம், வேண்டாம்! தவறி விழுந்தால் உடைந்து போவீர்கள்'' என்று மறுத்தான் பரதன்.




''அதெல்லாம் விழ மாட்டோம். கெட்டியாகப் பிடிச்சுக்கறோம்'' என்று பானைகள் அடம் பிடித்தன.

பாவம், பரதன் என்ன செய்வான்? எல்லாவற்றையும் அழைத்துச் சென்று ராட்டினத்தில் ஏற்றினான்.

"கெட்டியாப் பிடிச்சுக்கங்க. மேலே போறப்ப தலையைச் சுத்தும். தம்பி, ராட்டினத்தை மெதுவாகச் சுத்துப்பா'' என்றான் பரதன்.

ராட்டினம் சுழல



ஆரம்பித்ததும் பானைகள் உற்சாகமாகப் பாடின.

'ராட்டினமாம் ராட்டினம்
ரங்கன் சுற்றும் ராட்டினம்
மேலோகம் காண பறக்குது
கீழ்லோகம் வந்து இறங்குது.'

உற்சாக மிகுதியில் ஒரு பானை எழுந்து நடனமாடியது. அடுத்த நொடி கால் இடறி மேலே இருந்து கீழ்நோக்கி விழ ஆரம்பித்தது. ''ஆ! காப்பாத்துங்க, காப்பாத்துங்க'' என்று அலறியது.

பரதனின் கவனமெல்லாம் பானைக் குழந்தைகள் மீதே இருந்தது. அதனால் அந்தப் பானையை, கீழே விழாமல் சட்டெனத் தாங்கினான். அது நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

''யார் செய்த புண்ணியமோ? தப்பிச்சேன்! நன்றி அப்பா'' என்றது.

பிறகு மீண்டும் சந்தையை வலம் வந்தார்கள்.

''அப்பா, அந்தப் பையன் சாப்பிடறானே, அந்த மாதிரி இனிப்பு எனக்கும் வேண்டும்'' என்று ஒரு பானை, பரதனை அழைத்தது.

''அப்பா, எனக்கு அந்தப் பொம்மையை வாங்கிக் கொடுங்க'' என்று இன்னொரு பானை, வேறு பக்கம் அவன் கையைப் பிடித்து இழுத்தது.

''எனக்குப் பசிக்குது'' என்றது மற்றொரு பானை.

''அதுக்குள்ளே என்னடா பசி? சும்மா இருடா'' என்றது அடுத்த பானை.

''உனக்கென்னடா? அப்பா தானே வாங்கித் தரப் போறார்'' என்றது அது.

''சரியான சாப்பாட்டு ராமன்'' என்றது இது.

''யாரைடா சொன்னே?'' என்ற அது, ஓங்கி ஒரு குத்து விட்டது.

''என்னையா அடிக்கறே? இந்தா, வாங்கிக்க'' என்று இதுவும் கையை ஓங்கியது.

இரண்டும் தரையில் கட்டிப் பிடித்து உருண்டன. முதலில் செய்வதறியாது திகைத்துப் போன பரதன், இரண்டையும் தடுத்தான்.

''ஏய், ஏய்! சண்டைப் போடாதீங்க. சொன்னா கேளுங்க'' என்றவன் பிரித்துவிட்டான்.

''ஆ! என் சுண்டுவிரலை உடைச்சுட்டான்'' என்று முதல் பானை அழுதது. ஆம்! அதனுடைய வலக்கை சுண்டு விரல் உடைந்திருந்தது.

''அழாதே! உனக்கு வேற சுண்டு விரலை ஒட்டறேன். எல்லோரும் சீக்கிரம் வாங்க'' என்ற பரதன் அந்தப் பானையைத் தூக்கிக்கொண்டு விரைந்தான். மற்ற பானைகள் பின் தொடர்ந்தன.

அனைவரும் தமிழரசி இருந்த இடத்தை அடைந்தார்கள். ''என்ன ஆச்சு?'' என்று கேட்டாள்.


''ரெண்டு பேருக்கும் சண்டை.

மந்திரப்பட்டியில் நிறைய மந்திரவாதிகள் உண்டு. அவர்கள் அடிக்கடி தந்திரப்பட்டி மக்களுக்குத் தொல்லை அளிப்பார்கள். அதைத் தந்திரப்பட்டிக்காரர்கள் தங்கள் அறிவால் வெல்வார்கள். அப்படித்தான் ஒரு முறை...



அடுத்த விசித்திர, விநோதக் கதை

மந்திரப்பட்டி, தந்திரப்பட்டி!



இவன் சுண்டுவிரல் உடைஞ்சு போச்சு'' என்ற பரதன், வண்டியிலிருந்த களிமண்ணை எடுத்து வந்தான். அதில் சுண்டுவிரல் செய்து ஒட்டினான்.

'போன விரல் வந்தாச்சு.
போக்கிரித்தனம் போயாச்சு.
சண்டித்தனம் விட்டாச்சு
சமாதானம் ஆயாச்சு'
என்று ஒரு பானை பாடியது.

''தமிழரசி, எல்லோரும் பசியா இருக்காங்க. சாப்பாடு கொடு'' என்றான் பரதன்.

தமிழரசி அனைவருக்கும் சாப்பாட்டைப் பரிமாறினாள்.

''அம்மா, எனக்கு ஊட்டி விடு'' என்றது ஒரு பானை.

''அவனுக்கு ஊட்டினா எனக்கும் ஊட்டி விடணும்'' என்றது மற்றொரு பானை.

''அடடா, இப்பதானே சண்டைப் போட மாட்டோம்னு சொன்னீங்க? அதுக்குள்ளே மறந்தாச்சா? அவன் சின்னவன். அதனால அம்மா ஊட்டி விடட்டும். நீ பெரியவன். அதனால நீயே சாப்பிடு'' என்றான் பரதன்.

''சரி, சரி'' என்று தலையாட்டியது பானை.

ஒருவழியாக சந்தை முடிந்தது. அனைத்துப் பானைகளையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு கிளம்பினர். வழிப் பிள்ளையார் கோயிலை நெருங்கியதும், பரதன் வண்டியை நிறுத்தினான்.

''தமிழரசி, வா பிள்ளையாரை வணங்கிவிட்டு வரலாம்'' என்றான்.

இருவரும் கோவிலுக்குள் சென்றனர்.

''பிள்ளையாரப்பா! எங்கள் குறையைத் தீர்க்க பானைகளையே குழந்தைகளாகக் கொடுத்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி! அவற்றை நாங்கள் கவனமாகப் பார்த்துக் கொள்கிறோம். எங்களுக்கு நிஜமான குழந்தையையும் தாருங்கள்'' என்று வேண்டினாள் தமிழரசி.

அப்போது பிள்ளையார் தோன்றினார். ''பரதா, தமிழரசி உங்களின் பொறுமையைப் பரிசோதிக்கவே இப்படிப் பானைகளைக் குழந்தைகளாக்கினேன். நீங்கள் சற்றும் கோபப் படாமல் அவை செய்த குறும்பு களைப் பொறுத்துக் கொண்டீர்கள். சந்தோஷம்! அடுத்த ஆண்டே உங்களுக்கு ஆண் ஒன்று, பெண் ஒன்றென இரட்டைக் குழந்தைகள் பிறக்கும். சந்தோஷமாக இருங்கள்'' என்று வாழ்த்தி மறைந்தார்.

பரதனும் தமிழரசியும் சந்தோஷமாக வெளியே வந்தார்கள். அங்கே பானைக் குழந்தைகள், சாதாரணப் பானைகளாகி இருந்தன. இருவரும் ஊரை நோக்கி வண்டியை விரட்டினர்.

(முடிந்தது)

நேரம் என்ன நேரம்?





இந்திய நேரம் பகல் 12 மணியின்போது மற்ற நாடுகளின் மணி விவரங்கள்:

அமெரிக்கா, சிகாகோ	1.30	நள்ளிரவு
நியூயார்க்	2.00	"
பெல்ஜியம்	6.30	காலை
லண்டன், அல்ஜீரியா	6.30	"
ஆப்பிரிக்கா, இத்தாலி,	7.30	"
செக்கோஸ்லோவாகியா	7.30	"
ஜெர்மனி, ஹாலந்து,	7.30	"
ஆஸ்திரேலியா ஹங்கேரி,	7.30	"
போலந்து	7.30	"
ஸ்பெயின், நைஜீரியா	7.30	"
யூகோஸ்லாவியா	7.30	"
கிரீஸ்	8.30	"
சூடான்	8.30	"
மாஸ்கோ	9.30	"
குவைத்	9.30	"
ஈராக்	9.30	"
பாகிஸ்தான்	11.30	நண்பகல்
பங்களாதேஷ்	12.30	"
பர்மா	1.00	பகல்
இலங்கை	1.00	பகல்
தாய்லாந்து	1.30	"
சிங்கப்பூர்	2.00	"
ஹாங்காங்	2.30	"

- லே. அரவிந்குமார், எட்டாம் வகுப்பு, சாரதா மெட்ரிக்குலேஷன் பள்ளி, செஞ்சி



"பசங்களா, எப்படி இருக்கீங்க?"

"வாங்க ஆண்ட்டி."

"நீங்க எல்லாம் ஆண்டுத் தேர்வுக்குப் படிச்சுட்டு இருப்பீங்க. அதனாலதான் நானே பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்."

"ஆமாம் ஆண்ட்டி; குரூப் ஸ்டடி. நீங்க வந்தது கொஞ்சம் ரிலாக்ஸா இருக்கு. நீங்க என்ன புத்தகம் படிச்சீங்க?"

"கோகுலத்துல மாதம்தோறும் ஹலோ டாக்டர் பகுதி வர்றது தெரியுமில்லியா?"

"ஓ! மிகவும் பயனுள்ள பகுதியாச்சே. ஆரோக்கியம் குறித்த வாசகர்களின் கேள்விகளுக்கு எளிமையாகப் பதில் சொல்வாரே டாக்டர் கு.கணேசன்."

"கரெக்ட்! அந்தக் கேள்வி - பதில்களைத் தொகுத்து 'ஆரோக்கிய வாழ்வுக்கு டாக்டரின் ஆலோசனைகள்' என்கிற தலைப்பில் கங்கை புத்தக நிலையம் நூல் வெளியிட்டு இருக்காங்க. இந்தப் புத்தகம் கையில இருந்தா டாக்டரே கையில இருக்கிற மாதிரி. அப்புறம் 'பாடும் சின்னப் பறவைகளே' என்கிற குழந்தைப் பாடல்கள் தொகுப்பையும் படிச்சேன். ஆரிசன் என்பவர் எழுதியவை. பக்கத்துக்குப் பக்கம் சின்னச் சின்னப் படங்களைப் போட்டு அழகா வடிவமைச்சு இருக்காங்க. சிலவற்றில் சந்தம், ஓசை நயம் தவறுது. அதில் இன்னும் கவனம் செலுத்தி எழுதியிருக்கலாம். தேர்வுகள் முடிந்ததும் வீட்டுக்கு வாங்க; புத்தகம் தரேன். இப்ப படிங்க. போய்ட்டு வரேன்."

"ஓ.கே. ஆண்டட்டி! பை!"

கைக்குள் டாக்டர்!





ஆரோக்கிய வாழ்வுக்கு டாக்டரின் ஆலோசனைகள் - டாக்டர் கு.கணேசன் - கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17 - 192 பக்கங்கள். விலை ரூ. 60/-

பாடும் சின்னப் பறவைகளே - ஆரிசன். அகநி வெளியீடு, அம்மையப்பட்டு, வந்தவாசி - 604 408. 64 பக்கங்கள் - விலை ரூ.30/-

நட்சத்திர மீன்

ஆழி




'நட்சத்திர மீன்' என்பது உண்மையில் மீன் இனத்தைச் சேர்ந்தது அல்ல. அது நட்சத்திரப் படம்போல் இருப்பதாலும், கடலில் வாழ்வதாலும் 'நட்சத்திரமீன்' என்று தவறாகச் சொல்லப்படுகிறது. அது 'கடல் வெள்ளரி','கடல் முள்ளெலி' முதலியவற்றின் வகையைச் சேர்ந்தது. முதுகெலும்பு இல்லாதது. நட்சத்திர மீன்களை 'முள் தோலிகள்' என்னும் பிரிவில் சேர்ப்பார்கள் விஞ்ஞானிகள்.




கடல் வெள்ளரி

கடல் முள்ளெலி



இதன் உடல் முழுவதும் நீர் நிரம்பிய குழாய்களால் அமைந்தது. இந்தக் குழாய்கள் இதன் அடிப்பக்கம் சிறு சிறு 'வட்டு'களாக இருக்கும். இந்த வட்டுகள் கால்களாகச் செயல்பட்டு, நகர்ந்து செல்லப் பயன்படுகின்றன. சுவாசிப்பதுகூட இந்த வட்டுகளால்தான்.





நட்சத்திர மீனுக்குத் தலை என்னும் உறுப்பு இல்லை. அதனால் அதற்கு மூளைப் பகுதியும் இல்லை. அதன் கைகளின் இடுக்கில் ஓரிடத்தில் ஒரு சிவப்புப் புடைப்பு உண்டு. அதுதான் பார்க்கிற உறுப்பாகச் செயல்படுகிறது. நட்சத்திர மீனுக்கு நல்ல மோப்ப சக்தி உண்டு.


நட்சத்திர மீனின் வாய், அதன் உடலின் அடிப் பக்கம் இருக்கிறது. உடலின் அடியில் உள்ள வட்டுகளால், கிளிஞ்சல், சிப்பி போன்றவற்றின் மேல் ஓடுகளைத் திறந்து, அவற்றின் மென்மையான சதைப் பகுதிகளைத் தின்றுவிடுகிறது. நட்சத்திர மீனின் முக்கிய இரை கிளிஞ்சலும் சிப்பியும்தான்.






16 கைகள் கொண்ட 'முள்முடி' நட்சத்திர மீனின் இரை பவளப் பூச்சிகள். இது தன் வயிற்றிலிருந்து ஜீரண நீரை பவளப் பூச்சிகளின் மேல் பரவ விட்டு, அவற்றைச் செயல் இழக்கச் செய்து, சத்தை உறிஞ்சிவிடும்.

நட்சத்திர மீன்கள் பொதுவாக 5 கைகளுடன் இருக்கும். ஆனால், அவை ஐந்துக்கும் மேற்பட்ட கைகளுடனும், பலவடிவங்களிலும், பலநிறங்களிலும் இருக்கின்றன.



'சூரிய'
நட்சத்திர மீன்



சூரியகாந்திப் பூ
நட்சத்திரமீன்




கடல் வௌவால்
நட்சத்திர மீன்




சேற்று
நட்சத்திர மீன்



வார்ட்டி கடல்
நட்சத்திர மீன்





வெளிர் ஊதா
நட்சத்திர மீன்



இரத்த
நட்சத்திர மீன்


நட்சத்திர மீன், மீன் மாதிரி முட்டை யிட்டுக் குஞ்சு பொரிக்கிறது. முட்டைகளி லிருந்து வெளிவரும் குஞ்சுகள் முதலில் நீரில் அங்குமிங்கும் நீந்திக் கொண்டி ருக்கும். அதன் பிறகு அவை கடலின் அடித்தரையில் தங்கிவிடும். கடலின் தரையில் அவை தவழ்ந்து போகும். சில சமயம் சேற்றில் புதைந்து கொண் டிருக்கும்.





எல்லா நட்சத்திர மீன்களும் விஷம் உள்ளவை அல்ல. 'பிரிட்டில்' என்னும் நட்சத்திர மீன் மட்டும் மரணத்தை ஏற்படுத்துகிற அளவுக்குக் கடுமையான விஷம் கொண்டது.

நட்சத்திர மீனின் ஒவ்வொரு கையின் முனையிலும் உள்ள உணர்வு சக்தியினால் அது எந்தத் திசையிலும் போக முடியும். அது கைகளின் உதவியால் கடலில் வேகமாக நீந்தும். ஒரு நட்சத்திர மீனின் கைகள் துண்டிக்கப்பட்டுவிட்டாலும், அவை நாளடைவில் முன்போலவே மறுவளர்ச்சி அடைந்து விடும்!



புத்தாடை அளித்தோம்!

எங்கள் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்று உள்ளது. அவர்கள் பெட்டிக்கடை வைத்து பிழைப்பு நடத்தி வருகிறார்கள். தீபாவளியின்போது எங்கள் வீட்டுக்குப் புத்தாடை வாங்க அப்பாவுடன் கடைக்குச் சென்றேன். எங்கள் அனைவருக்கும் எடுத்த பிறகு கூடுதலாக இரண்டு 'செட்' துணிகளை அப்பா எடுத்தார். ''இது யாருக்கு?'' என்று கேட்டோம். ''வீட்டுக்குப் போனதும் சொல்கிறேன்'' என்றார் அப்பா.

பிறகு வீட்டை அடைந்ததும் அந்தப் புத்தாடைகளுடன் அவர்களின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். என்னை விட்டு அங்கிருந்த இரண்டு குழந்தைகளுக்கும் கொடுக்கச் சொன்னார்.

''நீங்கள் தப்பாக நினைக்கக் கூடாது. தீபாவளியின்போது பட்டாசு, இனிப்பு என்று எவ்வளவோ செலவிடுகிறோம். இது போன்று மற்ற குழந்தைகளுக்குப் புத்தாடை அளித்தால் மகிழ்ச்சிக்கு மகிழ்ச்சியும் கிடைக்கும்; உபயோகமாகவும் இருக்குமல்லவா?'' என்று அப்பா, அந்த மாமாவிடம் சொன்னார்.

அவர்கள் நன்றி தெரிவித்தார்கள். அன்று முதல் எங்கள் இரண்டு குடும்பங்களும் மிகவும் நெருக்கமாகி விட்டோம்.

- வே. தனசேகர்
(மூன்றாம் வகுப்பு),
கலைமகள் வித்யா மந்திர்
மெட்ரிக் பள்ளி,
கும்மிடிப்பூண்டி

புதிய நண்பன்!

நாங்கள் முன்பு மன்னார்குடியில்

பாட்டியின் ஃபோட்டோ!




இருந்தோம். எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் புதிதாக ஒரு குடும்பம் வந்தது. அப்போது ஒருநாள் எனக்கு 'ஜியாமெட்ரி பாக்ஸ்' தேவைப்பட்டது. அப்பாவிடம் சொன்னேன். மாலையில் வாங்கி வருவதாகச் சொன்னவர் மறந்துவிட்டார். எனக்கோ காலையில் ஜியாமெட்ரி பாக்ஸோடுதான் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்ற கட்டாயம். அதனால் இப்போதே வேண்டும் என்று அழுதேன்.

எனது அழுகைச் சத்தத்தைப்

பக்கத்து வீட்டிலிருந்த விமல் என்ற சிறுவன் கேட்டிருக்கிறான். உடனே அவனது ஜியாமெட்ரி பாக்ஸோடு என் வீட்டுக்கு வந்தான். "இந்தா இதை எடுத்துட்டுப் போ! நாளைக்குப் புதிதாக வாங்கிய பிறகு இதைக் கொடு" என்றான்.

கேட்காமலே தேடி வந்து உதவிய அவனை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. அன்று முதல் நாங்கள்



நண்பர்களானோம். இப்போது நான் ஊர் மாறி வந்து விட்டபோதிலும் எங்கள் நட்பு தொடர்ந்து கொண்டிருக்கிறது.

- த. பரதன், திருவாரூர்

பாட்டியும் புகைப்படமும்!

என் பக்கத்து வீட்டுத் தோழியின் குடும்பத்துடன் நாங்கள் எப்போதும் ஒற்றுமையாக இருப்போம். தோழியின் பாட்டியை எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் என்னைப் போன்ற வேறு சில தோழிகளையும் ஒன்று சேர்த்து, பழங் காலக் கதைகள் சொல்வார். மிகவும் அன்போடு பழகுவார்.

ஆனால் அவருக்குப் புகைப்படம் எடுப்பது மட்டும் பிடிக்காது. எத்தனையோ விசேஷங்கள் வந்த போது நாங்கள் எவ்வளவோ வற்புறுத்தினோம்.



'ஃபோட்டோ எடுத்தால் ஆயுள் குறைந்துவிடும்' என்று கூறி பிடிவாதமாக மறுத்துவிட்டார். அதனால் நான் ஒரு யோசனை செய்தேன். பாட்டிக்கே தெரியாமல் அவரைப் புகைப்படம் எடுத்தேன்.

சில நாட்கள் கழித்து, பாட்டியிடம் அந்தப் புகைப்படத்தைக் காட்டினேன். அத்துடன் 'ஃபோட்டோ எடுப்பதால் ஆயுள் குறையும் என்பது மூட நம்பிக்கை. அப்படியெல்லாம் நடக்காது'' என்று எடுத்துச் சொன்னேன்.

புகைப்படத்தைப் பார்த்தவர் ''அட! ஃபோட்டோவில் நான் ரொம்ப அழகா இருக்கேனே'' என்று கூறி மகிழ்ந்தார். அதை பத்திரமாக எடுத்து வைத்துக்கொண்டார். இது எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது.

- ஃபாத்திமா,
எட்டாம் வகுப்பு,
ஹமீதியா மேனிலைப்பள்ளி,
கீழக்கரை.





'பை' தினம்!




ஐ.நா.சபையின் அறிவிப்பின்படி, மார்ச் எட்டாம் தேதி அகில உலக மகளிர் தினமாகக் கொண்டாடப் படுகிறது. உலகில் பல்வேறு நாடுகளில் அன்றைய தினம் விடுமுறையாகும். அமெரிக்க சோஷலிஸ்ட் கட்சி, 1909ஆம் ஆண்டு பெண்களுக்கு நாட்டில் அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பிப்ரவரி 28ஆம் தேதியைப் பெண்கள் தினமாக அறிவித்தது. 1910-ஆம் ஆண்டு கோபன்ஹேகன் நகரில் நடந்த அகில உலக மகளிர் மாநாட்டில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர். அப்போது எடுக்கப்பட்ட முடிவின் படி, 1911ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் தேதி உலகமெங்கும் "மகளிர் தினம்" கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

பை தினம்

கணிதத்தில் ஒரு வட்டத்தின் சுற்றளவுக்கும் விட்டத்துக்கும் இடையிலான விகிதத்தை 'பை' என்று குறிப்பிடுவார்கள். இதன் மதிப்பு 22/7 என்ற பின்னமாகும். 'பை' என்பது கிரேக்க அரிச்சுவடியில் பதினாறாவது எழுத்து. 'பை' யின் மதிப்பினை தசமத் திருத்தமாக எழுத முற்பட்டால், அது முடிவின்றி சென்று கொண்டே இருக்கும். எனவே, இரண்டு தசம இடத் திருத்தமாக 3.14 என்று குறிப்பிடப்படுகிறது.

அதற்கு முக்கியத்துவம் தரும் வண்ணம், ஆண்டின் மூன்றாவது மாதமான மார்ச் மாதம் பதினான்காம் தேதி 'பை' தினம் கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில் 1801 ஆம் ஆண்டு, மே.வங்காளத்தில் உள்ள கொஷிப்பூரில் ராணுவத்துக்குத் தேவையான துப்பாக்கிகள் தயாரிப்பதற்காக ஒரு ராணுவ ஆயுதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. 1802-ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் தேதியன்று அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கியது. இன்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள நாற்பது ராணுவ ஆயுதத் தொழிற்சாலைகளில் ராணுவத்துக்குத் தேவையான பல்வேறு துப்பாக்கிகள், வெடி மருந்துகள் மற்றும் இதர பொருட்களை உற்பத்தி செய்யப்படுகின்றன. ராணுவத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் இந்தத் தொழிற்சாலைகளை முப்படைகளின் நாலாவது கரம் என்று சொல்வார்கள். மார்ச் 18ஆம் தேதியன்று ராணுவத் தொழிற்சாலை தினம் அனைத்து ராணுவத் தொழிற்சாலைகளிலும்





விமரிசையாகக் கொண்டாடப் படுகிறது. அப்போது தொழிற் சாலைகளில் சிறந்த முறையில் பணிபுரிந்தவர்களுக்கு ஆயுத ஸ்ரீ, ஆயுத பூஷண், ஆயுத ரத்னா போன்ற பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப் படுகிறது.



அகில உலக நிறவெறி ஒழிப்பு தினம் (மார்ச் 21)

ஐக்கிய நாடுகள் சபையின் அறிவிப்பின்படி 1966ஆம் ஆண்டு முதல் மார்ச் மாதம் இருபத்து ஒன்றாம் தேதி அகில உலக நிறவெறி ஒழிப்பு தினம் கொண்டாடப் படுகிறது. பல்லாண்டுகள் தென் ஆப்ரிக்காவில் கறுப்பு இன மக்கள் இரண்டாம் தரக்குடி மக்களாக நடத்தப்பட்டதன் காரண மாக அவர்கள் தங்கள் உரிமைக்காகத் தொடர்ந்து போராடினார்கள் என் பதுவரலாறு. 1960-ஆம் வருடம் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த கறுப்பு இன மாணவர்கள், வெள்ளை அரசின் நிறவெறிக் கொள்கைக்கு எதிராகப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தபோது, வெள்ளை ஆட்சியாளர்கள் 69 மாணவர்களை அநியாயமாகச் சுட்டுக் கொன்றார்கள். இந்தத் துயரச் சம்பவத்தை யடுத்து உலகமெங்கும் நிறவெறியைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், ஐ.நா. சபை மார்ச் 21 ஆம் தேதியை அகில உலக நிறவெறி ஒழிப்பு தினமாக அறிவித்தது. உலகத்தின் எந்தப் பகுதியிலும் நிற வேறுபாடு இருக்கக்கூடாது என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

உலக வன தினம் (மார்ச் 21)

காடுகளின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவும், காடுகளால் உலகுக்கு ஏற்படும் பயன்களை எடுத்துக் கூறவும் 1971-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மார்ச் 21-ஆம் நாள் உலக வன தினமாக கொண்டாடப் படுகிறது. காட்டுவளத்தை எப்படிப் பாதுகாப்பது, காட்டுப் பகுதிகளிலிருந்து இன்னும் எப்படியெல்லாம் மனித இனம் பலன் பெறலாம் என்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் உலகமெங்கும் பல் வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின் றன.

- **உலகக் காச நோய் தினம்:** *மார்ச் 24*
- **உலக வானிலை ஆராய்ச்சி தினம்:** *மார்ச் 23*

பெயர் வந்த கதை!

ஹாய் ஃப்ரெண்ட்ஸ்! எப்படி இருக்கீங்க? போன மாதம் பிரேம் சாயி, நாராயணி இருவரையும் தேடிப் பிடிச்சு கவர் ஸ்டோரி செய்ததுக்கு உங்களிடமிருந்து ஏகப்பட்ட பாராட்டு மழை! அந்த மழையில நனைஞ்சு எனக்கு ஜலதோஷமே பிடிச்சுப் போச்சு. இந்த மாதம் அதைவிட சுவையான விஷயத்தை கோகுலத்தின் ஆசிரியர் மற்றும் சிலர் மூலமா திரட்டி இதோ உங்களுக்குச் சொல்லப் போறேன்.



வீட்டில் ஒரு குழந்தை பிறந்தால் அதற்கு யார் பெயர் வைப்பார்கள்? பெரியவங்கதான்! ஆனா நம்ம கோகுலத்துக்குப் பெயர் வைத்தது யார் தெரியுமா? அன்று சிறுவர்களாக இருந்தவர்கள்தான்! முதலில் பெயர் வைக்கப்பட்டு, பிறகு பிறந்த குழந்தைதான் கோகுலம்.

கல்கி வார இதழில் அப்போது ஒரு போட்டி அறிவிக்கப்பட்டது. சிறுவர்களுக்காக ஒரு பத்திரிகை வெளியிடப் போவதாகவும், அதற்குச் சிறுவர்களே பெயர் வைக்குமாறும் போட்டி! நிறைய பேர் உற்சாகத்துடன் கலந்து கொண்டனராம். வந்த பல்வேறு பெயர்களிலிருந்து 'கோகுலம்' என்ற பெயர் தேர்வானது.

'கோகுலம்' என்றால் கிருஷ்ணன் குழந்தைப் பருவத்தில் வசித்த இடம். குறும்புத்தனம், விளையாட்டு என எப்போதும் அந்த இடத்தில் மகிழ்ச்சி நிலவும். அதுபோல் கோகுலத்தைப் படிக்கும் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்தப் பெயர் வைக்கப்பட்டது.

இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு அளித்த பரிசுகூட வித்தியாசமானது. அதாவது கொழுக்கட்டைக்குள்

தங்க நாணயம் வைத்துத் தரப்பட்டது.

“கோகுலத்தில் விநாயகர் மடியில் கண்ணன் அமர்ந்திருப்பதைப் போல் ‘லோகோ’ வருமல்லவா? அது குழந்தைகளை மிகவும் கவர்ந்த லோகோ. அது வந்ததுகூட சுவாரஸ்யமான கதைதான்” என்கிறார் ஓவியர் வேதா.



• கோகுலம் லோகோ

இவர் பிப்ரவரி ’83 கோகுலம் முதல் இதழில் தலையங்கப் பகுதி உட்பட பல்வேறு கதை, கவிதைகளுக்கு ஓவியம் வரைந்துள்ளார். கல்கி நிறுவனத்தில் பகுதி நேரமாகவும் பணிபுரிந்தவர். கல்லூரியில் படிக்கும்போதே கோகுலத்துக்குப் பணியாற்றியவர்.

“இந்த லோகோவை வரைந்தவர் பிரபல ஓவியரான மணியம் அவர்கள். கோகுலம் பிறப்பதற்குப் பல வருடங்களுக்கு முன்பே வரைந்துவிட்டார். கல்கி நிறுவனத்திலிருந்து ‘கோகுலம்’ பத்திரிகையை வெளியிடுவதென முடிவானதும் நிறுவனர் சதாசிவம் அவர்கள் இந்த லோகோ பொருத்தமாக இருக்குமெனச் சொல்லி அதையே வைத்தாராம்” என்கிறார் வேதா.

திருமுருக கிருபானந்த வாரியார் குழந்தைகளுக்காக எழுதிய பக்தி தொடர் நமது கோகுலத்தில் வெளிவந்தது.

அதேபோல் இன்று புகழ் பெற்ற சொற்பொழிவாளராய் இருக்கும் சுகி.சிவம் அவர்களின் ‘வெற்றிவேல் வீரவேல்’ என்கிற படத் தொடர் கோகுலத்தில் வெளியானது.

அன்றையக் குழந்தைகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட வாண்டுமாமா, பலே பாலு, வீராதி வீரன் போன்ற அற்புதமான படக்கதைகள் படைத்தார். இப்போது இவற்றைப் படித்தாலும் விறுவிறுப்பும் சுவையும் குறையாமல் செல்லும். வேறு எந்தப் பத்திரிகையும் செய்யாத புதுமையையும் கோகுலம் செய்துள்ளது. ஒவ்வொரு இதழிலும் வெளியாகும் கதை, கவிதை, கட்டுரைப் போன்றவற்றை எழுதிய படைப்பாளர்களின் புகைப்படங்களை இரண்டாம் பக்கத்தில் வெளியிடுவார் குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா. அதுவரை தங்களது அபிமான எழுத்தாளர்களின் படைப்புகளை மட்டுமே படித்திருந்த குழந்தைகள் அவர்களின் முகங்களைப் பார்த்து



சுழல் கோப்பை!

கோகுலம் இதழில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு உங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்க, படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள்.


மகிழ்ந்தனர். இன்றும் அறிவியல் செய்திகளைத் தரும் 'ஆழி' அவர்களின் கதையும், புகைப்படமும் அப்போது வெளியாகியுள்ளது.

இன்னொரு ஆச்சர்யமான விஷயத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். கோகுலத்தின் உண்மையான வயது முப்பத்தைந்து.

ஆம்! 15.4.1972-ல் முதலில் கோகுலம் மாதமிருமுறை பத்திரிகையாக வெளியானது.



• பிப்ரவரி '83ல் வெளியான ஓவியம்



• ஓவியர் வேதா

அப்போது அதன் விலை முப்பது பைசாதான். 1976 வரையில் வந்த கோகுலம் சில பிரச்னைகளால் நிறுத்தப்பட்டது. பிறகு 1978-ல் தொடங்கி ஓராண்டுக்குள் மீண்டும் தடைபட்டது.

'தடைகளைப் படிகற்களாகக் கொண்டு செயல்பட்டால் வெற்றி நிச்சயம். முயற்சி திருவினையாக்கும்' என்றெல்லாம் பெரியவர்கள் சொல்வார்களல்லவா? அதற்குச் சரியான உதாரணமாக கோகுலத்தைச் சொல்லலாம்.



இரண்டு முறை தடைபட்ட போதும், 1983 பிப்ரவரியில் மீண்டும் புத்துயிர் பெற்று வெளியாகி இன்று வரையில் உங்கள் உள்ளத்தில் சிம்மாசனமிட்டு அமர்ந்துள்ளது கோகுலம்.

தடைகளைக் கண்டு பயந்துவிடக் கூடாது; சோதனைகளைக் கண்டு சோர்ந்து விடக் கூடாது. இதுதான் கோகுலம் நமக்குச் சொல்லும் பாடம். இன்று புகழின் உச்சியில் இருக்கும் பலருடைய கதைகளைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் பல்வேறு தடைகளைத் தாண்டி வந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

நீங்களும் அப்படி இருக்க வேண்டும். அடடா! ஜாலியாக ஆரம்பித்த கட்டுரை இவ்வளவு சீரியஸாயிடுச்சே! சரி விடுங்க. அடுத்த மாதம் வேறொரு ஜாலியான விஷயத்துடன் உங்களைச் சந்திக்கிறேன். அடுத்த மாதம் ஏப்ரல், விடுமுறையாக இருக்கும். உங்கள் உற்சாகத்தில் கோகுலமும் இடம் பெறும் வகையில் சிறப்பிதழாக வரப் போகிறது. இப்ப பரீட்சைக்குக் கவனமாப் படிங்க. பை! பை!

"ஒரு ஐடியா" என்றாள் ஆனந்தி.

"என்ன?"

"உனக்கு சென்னைக்குப் போக ஆசை. எனக்கு இந்தக் காட்டுப் பகுதியில கொஞ்ச நாள் நிம்மதியா இருக்க ஆசை. நம்ம ரெண்டு பேரோட ஆசையும் நிறைவேறணும்னா அதுக்கு ஒரு வழி இருக்கு!"

தென்றல் புரியாமல் விழித்தாள். "நீ என்ன சொல்ல வரே, ஆனந்தி?"


"நாம இரண்டு பேரும் பார்க்கிறதுக்கு ஒரே மாதிரி இருக்கோமில்லியா?"

தென்றலுக்குப் புரிந்துவிட்டது. "ஐயோ!" என்று கத்திவிட்டாள்.


ஆனந்தி அவள் கையைப் பிடித்து இழுத்தாள்.

"பயப்படாதே. பொறுமையா உட்கார்ந்து பேசலாம்."

கொய்யா மரத்தின் நிழலில் இருவரும் ஒதுங்கினார்கள். "இதோ பாரு தென்றல். நான் சொல்றதைக் கவனமா கேளு. இதுல எந்தப் பிரச்னையும் வராது. நீ என்னோட வீட்டுக்குப் போ. என்னை மாதிரியே இருக்கிற



5



"தாலே யாராலயும் உன்னை அடையாளம் காண முடியாது. நகர வாழ்க்கைன்னா என்னன்னு நீ நல்லா தெரிஞ்சுக்கலாம்."

"அப்ப நீ?"

"நான் உன் தாத்தாவோட இங்கேயே தங்கிடறேன். எனக்கு இந்தக் காடு ரொம்பப் பிடிச்சிருக்கு."

"எனக்கு பயமா இருக்கு ஆனந்தி. உங்க அம்மா, அப்பா என்னைக் கண்டுபிடிச்சுட்டாங்கன்னா..."

"நாளைக்கே நீ போகப் போறதில்லை. நீ எப்படி நடந்துக்கணும், எப்படிப் பேசணும், எப்படி ஸ்கூலுக்குப் போகணும்னு எல்லாத்தையும் நான் சொல்லித் தரேன்."

"ஆ! ஸ்கூலை நான் மறந்தே போயிட்டேனே. டீச்சர் பெரிய பெரிய பிரம்பு வைச்சிருப்பாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேனே!"

தென்றலின் கையை அழுத்தமாகப் பிடித்துப் புன்னகை செய்தாள் ஆனந்தி.

என் பெயர் தென்றல்!



"கவலைப்படாதே, உன்னை யாரும் அடிக்க மாட்டாங்க. நிறைய புதுப் புது ஃப்ரெண்ட்ஸ் கிடைப்பாங்க. கம்ப்யூட்டர் இருக்கு, கத்துக்கலாம். டென்னிஸ், கேரம்னு நிறைய விளையாடலாம்."

"ரயில்ல போக முடியுமா?"

"ஓ, தாராளமா! இங்கே இருந்து ட்ரெய்ன்லதான் சென்னை போகணும். பஸ், ஆட்டோ, டு வீலர்னு ஜாலியா சுத்தலாம்."

"டீ.வி?"

"எங்க வீட்டுலயே டீ.வி. இருக்கு; பார்க்கலாம். மியூசிக் க்ளாஸ் போகலாம். நிறைய வித்தியாசமான அனுபவங்கள் கிடைக்கும்."

"ம். எனக்கும் ஆசையாதான் இருக்கு. சரி, எனக்கு எப்ப சொல்லித் தர்றே?"

"இன்னும் ரெண்டு நாள்ல எல்லாத்தையும் சொல்லிக் கொடுத்துடுறேன்."

"சரி!"

"அதே மாதிரி நீ காட்டைப் பத்தியும் உங்க வீட்டைப் பத்தியும் எனக்குச் சொல்லிக் கொடு. அப்பத்தான் நான் பயப்படாம இருக்க முடியும்?"

"நிச்சயமா. முதல்ல நான் உன்னை வௌவால் குகைக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன். வா!"



இருவரும் நடக்கத் தொடங்கினர். சூரிய ஒளி இதமாக இருந்தது. நீண்ட புல்வெளியை அடைந்தனர். தென்றலின் இடுப்பு வரை வளர்ந்திருந்தன அந்தப் புற்கள். ஆனந்தி குதூகலத்துடன் ஓடத் தொடங்கினாள். கண்களுக்கு எட்டும் தூரம் வரை புற்கள். இடையிடையே சிறு செடிகள், சில மரங்கள்.

பத்து நிமிடங்கள் நடந்திருப்பார்கள். தொலைவில் ஒரு குகை தெரிந்தது.

"அதுதான் வௌவால் குகை. எங்க தாத்தாதான் முதல் முதல்ல என்னை இங்கே கூட்டிக்கிட்டு வந்தார். வா, உள்ளே போய்ப் பார்க்கலாம்!"

"இதுவரைக்கும் நான் வௌவாலைப் பார்த்ததேயில்லை. ஃபோட்டோலதான் பார்த்திருக்கேன். வௌவால் கடிக்குமா?"

"கடிக்காது. என் கூடவே வா!"

வெளியில் வெளிச்சமாக இருந்தாலும், குகை இருட்டாகத்தான் இருந்தது. குப்பென்று ஒரு வித வாசனை மூக்கைத் துளைத்தது. தென்றலுக்குப் பழக்கப்பட்ட நாற்றம்தான் அது. ஆனால் ஆனந்திக்குப் புதுசு. கொஞ்சம் தடுமாறிவிட்டாள். ஆனால், விரைவில் சுதாரித்துக்கொண்டு தென்றலின் கையைப் பிடித்தபடி உள்ளே நுழைந்தாள்.

"அதோ அங்கே பாரு!" விரலை உயர்த்திக் காட்டினாள் தென்றல்.

ஆரம்பத்தில் ஆனந்திக்கு எதுவும் தெரியவில்லை. கண்களைக் கூர்மையாக்கிப் பார்த்தபோதுதான் தெரிந்தது. ஒன்றல்ல, இரண்டல்ல; கொத்துக் கொத்தாக வௌவால்கள். எல்லாமே தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தன.

"அட! இத்தனை வௌவாலா?"

"இது ரொம்பக் குறைச்சல். இந்த குகை முழுக்க பல ஆயிரக்கணக்கான வௌவால்கள் இருக்கின்றன."

இருவரும் நடக்கத் தொடங்கியதும், கீச் கீச்சென்று ஒலி எழுந்தது. ஆனந்தி நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்துக் கொண்டே நடந்தாள். சில வௌவால்கள் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு விர்ரென்று பறந்து போயின. தலையில் கொத்திவிடுமோ என்று பயமாக இருந்தது ஆனந்திக்கு. தென்றல் அவள் கையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருந்தாள்.

"வௌவாலால ராத்திரிலகூட ரொம்ப தெளிவா பார்க்க முடியும். காது ரொம்பக் கூர்மை! சத்தத்தோட எதிரொலியை வைச்சுத்தான் திசையைக் கண்டுபிடிக்கும். எவ்வளவு வேகமாப் பறந்தாலும், சுவருல முட்டிக்காது!"

குகைக்குள் நீண்ட நேரம் இருக்க முடியவில்லை. இருவரும் வெளியில் வந்தனர்.

"சாயந்திரத்துல இந்தக் குகைக்கு வெளியிலதான் நாங்க விளையாடுவோம். மான், மயில், ஆமைன்னு நிறைய நண்பர்கள் வருவாங்க. இரு, எல்லாரையும் பார்க்கலாம்."

அருகிலிருந்த ஒரு பெரிய பாறையில் அமர்ந்தனர். தென்றல் சொன்னதைப் போலவே மான்கள் ஓடி வந்தன. சிறிது நேரத்துக்கெல்லாம் மயில்கள் வந்து சேர்ந்தன. கூடுதலாக முயல்கள் வேறு துள்ளித் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

ஆனந்தியால் நம்பவே முடியவில்லை. மயில், மான், முயல்! பரபரப்பான சென்னை நகரில் இவற்றைப் பார்க்க முடியுமா? அதுவும் இத்தனை அருகில்?

காதைப் பிடித்துத்தான் ஒரு முயலைத் தூக்க வேண்டுமாம்! தென்றல் கற்றுக் கொடுத்தாள். ஆனால், ஆனந்தியால் முயலின் காதைப் பிடிக்க முடியவில்லை. நழுவி ஓடியது. மயில்களைக் கண் குளிர கண்டு ரசித்தாள்.

இரவு நெருங்கும்வரை இருவரும் அங்கேயே அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.



"சரி வா, கிளம்பலாம்! தாத்தா தேடுவாரு" என்று எழுந்து கொண்டாள் தென்றல்.

"இரு. நம்மோட திட்டம் எப்படி செயல்படுதுன்னு பார்த்துடுவோம். இப்ப வீட்டுக்குப் போகும்போது நீதான் ஆனந்தி. நான் தென்றல். தாத்தா நம்மை அடையாளம் கண்டு பிடிக்கிறாரான்னு பார்ப்போம்?"

தென்றலுக்கும் அது நல்ல யோசனையாகத் தோன்றியது. இருவரும் உடைகளை மாற்றிக் கொண்டார்கள். பிறகு, வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். (தொடரும்)

புதுமைப் போட்டி பரிசுக் கூப்பன்

புதுமைப் போட்டி	நான் கையொப்பமிட்டுக் கோகுலம் போஸ்டரைக் கொடுத்த...
என் பெயர் :	நண்பர் பெயர் : ....
வகுப்பு :	வகுப்பு : ....
பள்ளி :	பள்ளி : ....
....	....
வீட்டு முகவரி :	வீட்டு முகவரி : ....
....	....
....	....
தொலைபேசி (or) E-mail:	தொலைபேசி (or) E-mail: ....
....	....
	எனது கையொப்பம் : ....

அழகான பிரம்மிப்பூட்டும் கலையம்சங்களை உடைய சுவீடன் நாட்டுக் கப்பலான 'கோத்பர்க்' 1738-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 1745 செப்டம்பரில் சீனாவில் விபத்துக்குள்ளாகி மூழ்கியது.

இந்தக் கப்பலின் கலையம்சத்தில் ஈர்க்கப்பட்டவர்கள் மிகவும் கவலையடைந்தார்கள். விளைவு?

• பிறந்தநாள் கொண்டாடிய யானைகள்...!



ஹேப்பி பர்த்டே

கோத்பர்க் கப்பலைப் போலவே கலையம்சமும், அழகும் கொண்ட கப்பலை, பழைமையானப் (பழசான அல்ல) பொருட்களைக் கொண்டு 1986லிருந்து 1992 வரை வடிவமைத்தார்கள். கலையம்சங்களோடு, நவீன பாதுகாப்பு வசதிகளைக் கொண்ட இக்கப்பல் ஐந்து கண்டங்களில் பயணத்தை மேற்கொண்டு ஸ்பெயின், பிரேசில், தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு தன் அழகைக் காண்பித்துவிட்டு ஜனவரி இறுதி நாளன்று சென்னைத் துறைமுகத்துக்கு வந்து நிறைய பார்வையாளர்களின் மனத்தைக் கொள்ளை கொண்டது.

நம் ஜனாதிபதி மாளிகையில் மொகலாயர்கள் வடிவமைத்த அழகான மொகல் பூந்தோட்டம் இருப்பது உங்களுக்குத் தெரியுமா? அது வருடா வருடம் நம்மை மாதிரி பார்வையாளர்களுக்குத் திறந்து விடப்படும். இந்த வருடம் திறந்துவிட்டபோது அப்துல்கலாம் , "நிலவில் மண்ணெடுத்து செவ்வாய் கிரகத்தில் வீடு கட்டும் முயற்சியில் உலகம் எதிர்காலத்தில் ஈடுபடலாம்" அந்தப் பாதையை நோக்கி உலகம் சென்று கொண்டு இருக்கிறது. எனவே விண்வெளியில் அமைதி நிலவ பாடுபட வேண்டும்" என்றார். நாளை நீங்கள் கூட

செவ்வாயில் வீடு கட்டிக்கொண்டு குடியேறுவீர்களோ என்னவோ!



• சிறுவன் மேட்டஸ், மலைப்பாம்பு



உமாசாய்!

பிறந்தநாள் என்றால் நீங்கள் மட்டும்தான் புது டிரஸ் அணிந்து, நண்பர்களைக் கூப்பிட்டு கேக் வெட்டுவீர்களா குட்டீஸ்? யானைகளும் தங்கள் பிறந்தநாளைக் கும்மாளமாகக் கொண்டாடுகின்றன. எங்கு தெரியுமா? ஜெர்மன் நாட்டின் கிழக்குப் பகுதியில் 'ட்ரெஸ்டன் நகர்' மிருக காட்சி சாலையில் 'உமாசாய்' என்ற அழகான குட்டியானை தன் முதல் பிறந்தநாளை, தன் யானைக் குடும்பத்தோடு நிறைய கேக் சாப்பிட்டுக் கொண்டாடியுள்ளது!

பிரேசில் நாட்டில் காஸ்மோரமா நகரில் 'மேட்டஸ்' என்னும் அழகுச் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோது மலைப்பாம்பு அவனை விழுங்கிவிட்டது! அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுடைய தாத்தா பயப்படவில்லை. பாம்போடு மல்யுத்தம் நடத்தி வீழ்த்தி, தன் பேரனை உயிரோடு மீட்டிருக்கிறார். நம்ம நண்பர் மேட்டஸும் இப்போது சுகம். ○

• கோத்பர்க்



இந்த வேலை வேண்டாம்!

பொன்குரல் என்ற சேவலுக்கு சேது, மாது என்ற இரண்டு பிள்ளைகள் இருந்தன. அவை இரண்டும் சரியான சோம் பேறிகள். சின்னச் சின்ன வேலை களைக்கூட செய்யாமல் சும்மாவே சுற்றிக் கொண்டிருக்கும். அம்மா மென்குரல் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்பதில்லை.

ஒருமுறை மென்குரல் பக்கத்து ஊருக்குச் சென்றிருந்தது. வீட்டில் பொன்குரலும் சேது, மாது மட்டுமே இருந்தன. மென்குரல் இல்லாததால் பொன்குரலே சமையல் செய்யும் வேலையில் இறங்கியது.

"சேது, மாது நீங்க ரெண்டு பேரும் போய் நெற்கதிர்களை எடுத்து வாங்க" என்றது பொன் குரல்.

"அப்பா, வயல்வெளிக்கு ரொம்ப தூரம் போகணும். அதனால அந்த வேலை வேண் டாம். வேற ஏதாவது சொல்லுங்க" என்றது சேது.

பொன்குரலே வயலுக்குச் சென்று நெற்கதிர்களைப் பறித்து வந்தது. "சேது, மாது இந்தக் கதிரிலிருந்து அரிசியைப் பிரிச்சு எடுங்க" என்றது.

"அப்பா, அரிசியைப் பிரிக்கும் போது தூசி எங்க கண்களில் படும். அதனால இந்த வேலை வேண்டாம். வேற ஏதாவது சொல்லுங்க" என்றது மாது.

பொன்குரலே அரிசியை எல்லாம் பிரித்து எடுத்தது. பிறகு "சேது, மாது இந்த அரிசியைச் சுத்தம் செய்ய தண்ணீர் கொண்டு வாங்க" என்றது.


"அப்பா, தண்ணீர் எங்க உடம்புல பட்டு ஈரமாயிடும். அப்புறம் காய்ச்சல் வரும். இந்த வேலை வேண்டாம், வேற சொல்லுங்க" என்றன இரண்டும்.

"ஓகோ! சரி நீங்க போய் விளை யாடுங்க" என்ற பொன்குரல் இருவரையும் வெளியே அனுப்பியது.

சேதுவும் மாதுவும் நீண்ட நேரம் விளையாடி விட்டு வீடு திரும்பின. "அப்பா பசிக்குது. சாப்பாடு போடுங்க" என்றன.

"சாப்பாடா? அடுப்பைப் பற்ற வைத்தால் நெருப்பு சுடும் என்று சும்மா இருந்து விட்டேனே! வேறு





வேலை இருந்தால் சொல்லுங்கள்'' என்றது பொன்குரல்.


"அப்படியானால் நாங்கள் இப்போது என்ன சாப்பிடுவது?" என்று கேட்டன சேதுவும் மாதுவும்.

"அம்மா வரட்டும். அதன் பிறகு சாப்பிடுவோம்" என்றது பொன்குரல்.

சேதுவுக்கும் மாதுவுக்கும் என்ன சொல்வதென்றே புரியவில்லை. அவற்றுக்கு மிகவும் பசித்தது. அப்போது பொன்குரல் சொன்னது.

"சேது, மாது உழைப்பதற்கு சாக்குப் போக்குச் சொல்வது மிகவும் தவறு. இந்த வயதிலிருந்தே சின்னச் சின்ன வேலைகளைச் செய்தால் தான் பெரியவர்களானதும் சிரமமின்றி வேலைகளைச் செய்ய முடியும். இதை நீங்கள் புரிந்து கொள்வதற்காகத்தான் பொய் சொன்னேன். சாப்பாடு தயாராக உள்ளது, வாங்க" என்றது.

சேதுவும் மாதுவும் மகிழ்ந்தன. சாப்பிட்டு முடித்ததும் பாத்திரங்களை அவையே சுத்தம் செய்து வைத்தன. ○



ஹலோ தோழர்களே! கடந்த மாதம் நான் கேட்ட ஐந்து கேள்விகளுக்கும் பதில்களை அனுப்பி அசத்திட்டீங்க.

முதல் கேள்வி:

பிள்ளையாரை வணங்கும்போது தலையின் இரு பக்கமும் குட்டி, தோப்புக்கரணம் போடுவது எதற்கு?

ஒருமுறை சிறுவனாக இருந்த பிள்ளையார் ஏதாவது குறும்பு செய்ய நினைத்து, அகத்திய முனிவர் வைத்திருந்த கமண்டல நீரை காகத்தின் உருவத்தில் சென்று தட்டிவிட்டார். இதனால் கோபமடைந்த அகத்தியர் சிறுவனைக் குட்டினார். பிறகு அது பிள்ளையாரெனத் தெரிந்ததும் தனது தலையிலேயே குட்டிக்கிட்டாராம். அது முதல் பிள்ளையாரை வணங்கும்போது தலையில் குட்டிக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது.

இந்தப் பதிலை எழுதியவர்: ரா.ராஜா (ஒன்பதாம் வகுப்பு) அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மேட்டுப்பாளையம்.

இதே கேள்விக்கு மருத்துவ ரீதியான பதில்:

ஆர்.ஐஸ்வர்யா (பத்தாம் வகுப்பு) அரசு உயர்நிலைப்பள்ளி, மகாதானபுரம்.

நமது உடலின் அனைத்து நரம்புகளின் முடிச்சுகள் தலையில் இருபுறமும் உள்ளன. எனவே அங்கே மெள்ளக் குட்டிக் கொண்டால் நரம்புகள் தூண்டப்பட்டுச் சுறுசுறுப்பாக இயங்கும். மேலும் தோப்புக்கரணம் போடுவதால் கால்கள், மூட்டுக்கள், இடுப்பு ஆகியவற்றுக்கு நல்ல உடற்பயிற்சியாக அமையும்.

புராணக் கதைகளுக்கும் அறிவியல் மற்றும் மருத்துவத்துக்கும் நிறையவே சம்பந்தம் இருக்கிறது. அதனால் நமது புராணக் கதைகளை அலட்சியமாக நினைக்காமல் நிறையப் படிச்சுத் தெரிஞ்சுக்கங்க. ஓ.கே!

இரண்டாவது கேள்வி: வெள்ளை மயிலைத் தெரியுமல்லவா? அவை மட்டும் வண்ணம் இல்லாமல் இருப்பதன் காரணமென்ன?



சூப்பர்மே

எல்லா உயிர்களுக்கும் நிறத்தைத் தருவது மெலனின் என்ற நிறமிதான். வெள்ளை மயிலின் உடலில் இந்த மெலனின் இல்லை. இது வெப்பப் பிரதேசத்தில் வசிக்கும் அபூர்வ உயிரினமாகும். வெள்ளை நிறம் வெப்பத்தை

உள்வாங்காமல் திருப்பி விடும் ஆற்றல் கொண்டது.

வி.சந்தோஷ் (ஏழாம் வகுப்பு) ஜங்ஷன் மே.நி.பள்ளி, நெய்வேலி.

மூன்றாவது கேள்வி:

திருக்குறளில் உங்களுக்கு மிகவும் பிடித்த குறள் எது? ஏன்?

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' என்ற குறளே எனக்கு மிகவும் பிடித்தது. ஏனெனில் கல்வி கற்றால் மட்டும் போதாது; அதைத் தவறின்றி கற்க வேண்டும். கற்ற வழியில் செயல்பட வேண்டும் என்ற அற்புதமான கருத்தை எடுத்துச் சொல்கிறது. இதன்படி நடந்தால் நாம் அனைவரும் நல்ல குடிமக்களாய் இருக்கலாம்.

- பா. அன்னபூரணி, ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப்பள்ளி,
அம்மையகரம்



'இன்னா
செய்தாரை ஒறுத்தல்
அவர் நாண
நன்னயம் செய்து
விடல்' என்ற குறளே எனக்கு மிகவும் பிடித்தது. ஒரு வர் நமக்கு துன்பம் செய்தால் கோபப் படுவது இயற்கை. ஆனால் அதையும் பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அப்படிச் செய்வதால் உயர்ந்த மனிதனாகலாம் என்பதை இந்தக் குறள் உணர்த்து கிறது.

- மு. பாண்டிச்செல்வி,
ஐந்தாம் வகுப்பு,
ஊ.ஒ.தொ.பள்ளி, கூத்தனூர்

நான்காவது கேள்வி:

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு - இதைப் போல் நீங்களும் மூன்று வார்த்தைகளில் சுலோகன் எழுதுங்களேன்!

நேர்மை; பொறுமை; பெருமை



ாப்பாற்றுவாரா?



(அதாவது நேர்மையாக இருந்து பொறுமையாகச் செயல்பட்டால், பெருமை தேடி வரும்)

- ஜெ. அரவிந்தன், குப்பிபாளையம்

ஈடுபடு; பாடுபடு; கொண்டாடு (அதாவது ஒரு செயலில் முழுமையாக ஈடுபட்டு, அதை முடிப்பதற்காகப் பாடுபட்டால் வெற்றி கிடைக்கும். பிறகு கொண்டாடலாம்)

- பு. இந்துமதி, பத்தாம் வகுப்பு எஸ்.எஸ்.கே.வி.மே.நி.பள்ளி, காஞ்சிபுரம்

சபாஷ்! இரண்டு சுலோகன்களுமே அற்புதமல்லவா? மனத்தில் குறித்துக் கொள்ளுங்கள்.



இம்மாதக் கேள்விகள்:

1. கோடை விடுமுறையில் நீங்கள் செய்ய நினைத்திருக்கும் பயனுள்ள செயல் என்ன?
2. உங்களுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு எது? ஏன்?
3. ஐந்தே வரிகளில், அழகான கவிதை எழுதுங்களேன்!
4. சுதந்திரத்துக்குப் பின் தமிழகத்தின் முதல் முதலமைச்சர் யார்?
5. சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் என்ன?

ஒருவரே ஐந்து கேள்விகளுக்கும் பதில் அளிக்கலாம். ஆனால் ஓர் அஞ்சலட்டையில் ஒரு பதில் மட்டுமே எழுத வேண்டும்.

கடைசித் தேதி: 10.3.2007

இனி ஐந்தாவது கேள்வி:

உங்களுக்கு மிகவும் பிடித்த கார்ட்டூன் கதாபாத்திரம் எது? ஏன்?

இதற்கான பதிலாக நிறையப் பேர் டாம் அண்ட் ஜெர்ரியைக் குறிப்பிட்டுள்ளீர்கள். டாமும் ஜெர்ரியும் செய்யும் வேடிக்கைகள் உங்களை மிகவும் கவர்ந்துள்ளன என்பது புரிகிறது. அதேசமயம் ஒரு விஷயத்தை நீங்க புரிஞ்சுக்கணும். அதில் டாமும் ஜெர்ரியும் ஒருத்தரை ஒருத்தர் அடிச்சுக்கற மாதிரியும், உயரத்துல இருந்து விழுந்தும் ஒண்ணுமே நடக்காத மாதிரியும் எழுந்து போகும். அது சும்மா கற்பனைதான். நிஜத்தில் அப்படி நடந்தால் அடிபடும்; வலிக்கும். அதனால நாம் யாரையும் அடிக்கக் கூடாது; சண்டையிடக் கூடாது.

இன்னும் சிலர் 'எனக்கு சூப்பர் மேனைப் பிடிக்கும். அவர் ஆபத்தில் இருந்து எல்லோரையும் காப்பாற்றுவார். அவரைப் போல் எனக்கும் பவர் இருந்தால் உலக மக்களைக் காப்பேன்', என்று குறிப்பிட்டுள்ளனர். சூப்பர்மேன், ஸ்பைடர்மேன் என்பதெல்லாம் கற்பனைப் பாத்திரங்களே. உண்மையில் எந்த மனிதருக்கும் அது போன்ற சக்தி வராது. இது போன்ற கதைகளிலிருந்து 'யாருக்கும் தீமை செய்யக் கூடாது. முடிந்தவரை மற்றவருக்கு உதவ வேண்டும்' என்ற கருத்தை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். சூப்பர் மேனைப் போலப் பறக்க நினைப்பதோ, ஸ்பைடர்மேனைப் போல குதிக்க முயற்சிப்பதோ ஆபத்து. புரிந்ததா, தோழர்களே?

சரி, இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தவர்களில் பரிசு பெறும் இருவர்: சு. கார்த்திக் (ஆறாம் வகுப்பு) அரசு உயர்நிலைப்பள்ளி, கரூர்.


பி.ஜெயக்குமார், நம்பியூர்

அசைவுகளையும் ஓசைகளையும் எடிசன் படம் பிடித்துக் காட்ட எண்ணினார். தொடர்ந்து நாற்பத்தாறு நிழற்படங்களை எடுத்தார். பின்னர் அவற்றை விரைவாக அசைத்துத் திரையில் விழச் செய்தார். விழுந்த உருவங்களில் அசைவு காணப்பட்டது. இவற்றைக் கண்ட மக்கள் வியந்தனர். அவர் கண்டுபிடிப்பைப் பாராட்டினர். இக் கண்டுபிடிப்புத் தான் பிற்காலத்தில் திரைப்பட வளர்ச்சிக்கு வித்திட்டது.



ச.சுவர்ண லட்சுமி
ஆறாம் வகுப்பு,
பாரதி வித்யா பவன்,
ஈரோடு.

சூப்பர் கையெழுத்து!



கு.சிவசக்திவேல்
நான்காம் வகுப்பு,
எஸ்.பி.ஓ.எ.பள்ளி,
கோவை.

அறிவை விரிவு செய்.
ஆராய்ச்சி செய்து பார்.
இயற்கையைக் காத்திடு.
ஈ மொய்த்ததைச் சாப்பிடாதே.
உடற்பயிற்சி செய்.
ஊட்டச்சத்து உண்.
எரிபொருளை வீணாக்காதே.



“ஒரு பொருள் நீரில் மூழ்கி இருக்கும் போது அது இழந்ததாக தோன்றும் எடையின் அளவு, அதனால் இடம் பெயர்க்கப்பட்ட நீரின் எடைக்குச் சமம்” என்னும் தத்துவத்தை உருவாக்கினார். இதுவே ஆர்க்கிமிடிஸ் தத்துவம் என அழைக்கப்படுகிறது.

ஆர்க்கிமிடிஸ் தத்துவத்தின் அடிப்படையில் தான் கப்பல்களும், நீர்மூழ்கி கப்பல்களும் இயங்கி வருகின்றன. நீந்தும் போது உடலின் எடையளவு நீர் இடமாற்றம் செய்யப்படுவதால்தான் நீந்த முடிகிறது.



வா.ரஞ்சித் குமார்
எட்டாம் வகுப்பு,
திருவள்ளுவர் மேனிலைப்பள்ளி,
புதுப்பேட்டை.



ஏப்ரல் 2007 இதழ்...

விடுமுறைச் சிறப்பிதழ்!



இன்னும் பொலிவுடன்...
மேலும் புதுமையுடன்...

கோகுலம் தீம் பார்க்



விடுமுறையை உங்கள் கோகுலத்துடன் ஜாலியாகக் கொண்டாடக் காத்திருங்கள்!



படித்து ரசிக்க...

பெரியவர்கள் சொன்ன குட்டிக் கதைகள்!


உங்கள் கைவண்ணம்!
எஸ்.டி:லோககணபதி
தொன் போஸ்கோ மேல்நிலைப் பள்ளி
சகாயத்தோட்டம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka